[illegible]
V.3 No.41 16 Oct 1930.

SL
0021/N28 KN
N30.3.41.
189125

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly
வியாழன்தோறும் வெளிவரும்.

8-NOV 1930

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 3] 1930 ௵ அக்டோபர் ௴ 16௳ [No. 41.

## பொருளடக்கம்.


1. தலையங்கம் (Leader) 801
2. குறுந்தொகை (பாட்டு 236—255)
K. இராமரத்நம் ஐயர் B.A. 803
3. அப்பர் (பூமிப் பரிக்ஷை)
E. N. தணிகாசலமுதலியார் B.A. B.L. 808
4. பிரஜைகளின் கடமை (Plato's Dialogue)
K. இராஜகோபாலன் 811
5. தமிழ்ப்பாடம் (நைடதம்—நளன் தூதுப் படலம்) 813
6. கம்ப ராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 815
7. வர்த்தமானம் 719


## கலாநிலயம்

### சீனப் பழமொழி.

189125

பள்ளிக் கூடங்கள் திறக்கத் திறக்கச் சிறைச்சாலைகள் அடைக்கப்படும், என்று ஓர் பழமொழி சீன தேசத்தில் வழங்குமென்பர். அந்நாட்டிலேனும் இது எக்காலத்துக்குரிய வாய்மை யென்பது எமக்குத் தெரிந்ததில்லை. மற்று மேனாட்டு நாகரிக முறையில் நிகழும் நாடுகளிலோ எத்துணையும் இது இயையாமை எவருக்கும் எளிதில் புலப்படும். மேனாடுகளிலுந்தானே இற்றைநாள் நாகரிகம் அவர்க்கு மிகப் புதியது. பொருட்பிணிக்கு ஆளாகவே பழகிப் பழகித் தம்மொடு மற்றவரையும் பாழாக்க அவர் தொடங்கியுள இச்செய்தி இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன் அங்குந்தான் அருமையெனக் கூறலாம். அற்றைப்போதில் அவ்விங்கிலாந்தில் இன்றைக்கிருப்பனபோல் எண்ணரிய பாடசாலைகள் இருந்ததில்லை. மேற்பிறந்தார் சிலரேதான் நூற்கல்வி பயின்றிருந்தனர். ஏனையோர் எழுதவும் படிக்கவும் தெரிந்தவரலர். தற்காலம் இவ்விந்தியாவில் ஆண் கல்வி பெண் கல்விகள் எத்துணை குறைந்திருக்கின்றனவென்று முறையிடற்கு இலக்காகி நிற்கின்றனவோ அதனில் நூறு பங்கு குறைந்தே கற்றோர் தொகை அக்காலத்து இங்கிலாந்தில் இருந்தது என்று சொல்வதும் மிகை. ஆயினும் அக்காலத்தில் சீலமும் சிறப்புமுடைய வாழ்க்கை எக்குடிப் பிறந்தோர் மாட்டும் அங்கு இற்றை நாளினும் ஆயிரம் மடங்கு அதிகமாய் இருந்தது என்பதற்குச்சிறிதும் ஐயமில்லை. தேச சரித்திரங்களைப் பலபடப் புகழ்ந்து படிப்பவர்போல் பாவனைகள் செய்யாமல் உண்மையை உணரும் ஆர்வமும் ஆற்றலும் உடையார்க்கு இந்தச் செய்தி புதுமையாய்த் தோன்றாது. சில நூற்றாண்டுகளுக்கு முன் ஏழுவயதுப் பெண்ணொருத்தி பொன் நிறைந்த பையோடு இங்கிலாந்தின் வடகோடி முதல் தென்கோடி வரையில் துணையின்றித் தனிவழி நடந்தாலும் கள்வருக்கு என்றவள் சிறிதும் கவல வேண்டா, என்னத் தாமஸ் கார்லைல் என்னும் அறிஞர் சாற்றுகின்றார்.

பள்ளிக்கூடங்களும் பலபடிப் படிப்பும் இல்லாத இங்கிலாந்து அது. எல்லாச்செல்வமும் எல்லாச் சிறப்பும் இருக்கின்ற எங்கள் இங்கிலாந்தையும் அதுவனைய நிலையிலுள்ள மற்றைய நாடுகளையும் பாருங்கள். பள்ளிக்கூடம் ஒவ்வொன்றிற்குச் சிறைச்சாலைகள் பத்து எதிரெதிர் திறக்கவேண்டி நேர்கின்றதே. அவ்விங்கிலாந்தினும் மிகத் தாழ்ந்திருக்கின்றதெனக் கருதப்படும் நம்நாட்டிலும் அதன் நிலைமைக்குத் தக்கபடி பள்ளிக்கூடக் கணக்கிற்குரிய சிறைக்கூடங்களும் செறியாமல் இருக்கவில்லை. இவ்வண்ணம் சிதைய

வேண்டியவிதி சீனப் பழமொழியைச் சேர்ந்தது என்றானே, என்று ஏங்குகின்றோம்.

இரண்டு விடயங்களை ஆராய்ந்து காட்டும் இடம் இச் சிறைச்சாலை. நாட்டில் குற்றங்கள் எத்தனை புரியப் பெறுகின்றன வென்பது வொன்று. குற்றவாளிகளை எத்தனை அவை திருத்துகின்றனவென்பது மற்றதாம். சட்ட மறுப்பு முதலிய இயக்கங்களில் ஈடுபட்டுச் சிறைச்சாலைகளுக்கு மிக உவந்து சென்று வரும் சிலர் தவிர அங்கிருப்போர் அனைவரும் குற்றவாளிகளே. சட்டமும், போலீஸாரும், நியாயஸ்தலங்களும் ஒவ்வொரு சமயம் குற்றம் ஒன்றும் செய்யாதாரையும் குற்றவாளிகளெனவாக்கிச் சிறைக்கூடங்களுக்கு அனுப்பலாமாயினும் அதனால் நாட்டிலுள்ள குற்றங்களுக்குச் சிறைச்சாலைகள் பொய்க்கின்ற அளவைகள் ஆகா. ஆதலின் கல்வி அதிகரிக்க அதிகரிக்கக் குற்றங்களும் கூடவே, அதிகரித்து வரக் காண்கின்ற நாம் இவ்விரண்டிற்கும் ஏதேனும் தொடர்புளதோ எனச் சிந்திக்கலாவதும் நேரே. சிறைச்சாலைக்குள் இருப்பவர் அனைவரும் முன்சொன்னபடி குற்றவாளிகள் தாம் என்று கூறுவதினின்று, நாட்டிலுள்ள குற்றங்களனைத்தையும் கணக்கெண்ணிபாய் விட்டதென எண்ணலாகாது. சிறைவாய் அகப்படாது தப்பித் திரியும் குற்றவாளிகள் எத்தனையோ பலர். இனி நாட்டினது சட்டங்களுக்குள் அடங்காத குற்றங்களும் பலப்பல. ஆதலின் சிறையுள்ளிருக்கின்ற குற்றவாளி ஒவ்வொருவனுக்கும் நேரே வெளியில் ஆயிரம் ஆயிரம்பேர் இருக்கின்றார்கள் என்னலாம். பின் நாம் உரைக்கவருகின்ற ஒன்றினை உணர்வதற்கு முக்கியமாகிய இதனை மறத்தலாகாது.

பள்ளி சிறை என்னும் இவ்விரு கூடங்களுக்கும் ஏதேனும் தொடர்புண்டோ வென ஐயுற்றோம். 'ஐயவைய, என்னிது' எனச் சிலர் வியப்பர் 'சிறைக் கூடங்களுக் குள்ளிருக்கின்ற குற்றவாளிகளில் மிகப் பெரும் பகுதியோர் கல்லாத மாக்களே யல்லரோ? எல்லாரும் பாடசாலைக் கல்வி பெற்றுளராயின் பின், குற்றங்களைச் செய்து சிறைபுகுவதற்கு யாரேயுளர்' என அன்னவர் கேட்கலாம். இப்பொழுதுதான் நாம் சற்று முன் சொல்லிய விடயத்தை மனதிற்கொள்ள வேண்டும். சிறையகம் சேராதார் எல்லாம் நிரபராதிகள் அல்லர். படிப்புப்பலபடித்துப் பாடசாலைகளைப்போற்றுவோரில் குற்றங்கள் செய்வோரும் உளர். குற்றங்களுக்கெல்லாம் காரணமாவன கோபமும் ஆசையும். இவைகளை உடையாரெல்லாம் ஒவ்வோரளவு குற்றங்கள் செய்கின்றவர்களாகவே தீரவேண்டும். இக்குற்றங்களிற் சில அரசாங்க அதிகாரிகளால் கண்டுபிடிக்க இயலாதவைகளாகவும், சில அரச சட்டங்களால் தண்டிக்கத் தகாதவைகளாகவும் இருக்கலாம். இக் காரணங்களாலேயே அவை குற்றங்கள் ஆகாமற் போகா. எனின் பொங்கிய சீற்றமும் தங்கிய ஆசையும் தலைக்கொள்ளும் மாந்தரிடைக் குற்றங்களுக்கு ஒரு நாளும் குறைவில்லை. ஆயின், குற்றத்தால் குலையும் நிலையினின்று நம் வாழ்க்கையைக் காக்கலாவது கல்வி யெனும் கொள்கை இக்காலப் படிப்பளவில் பொய்யேயாய் நிற்கின்றது. நியாயஸ்தலங்களுக் குள்ளேயும், அரசியல் வாதங்களிலும் வர்த்தகத் துறைகளிலும், உத்தியோகங்களிலும் படித்தவர்கள் என்ற பேரோடு பயில்கின்றவர் தாம் சிறிதும் பெரிதும் ஆய குற்றங்கள் எத்தனை எத்தனை புரிகின்றார்களென்பதை இயம்பவும் வேண்டுமோ. ஆயினும், இப் படிப்புத்தான் அவைகளுக்குக் காரணமோ வென்னின், அன்றெனத் துணியாமுன் ஒன்றினை நினைத்தல் வேண்டும். முன் இதழ்களில் நாம் விளக்கிய வண்ணம், அமைதியைச்சிதைத்து ஆசையையே வளர்க்கு மிடங்கள் இப் பாடசாலைகளானால், குற்றங்கள் வளர்வதற்கு அவை காரணமல்லவென்று இயம்புதல் எளியதன்று. ஒருவிதத்தில் சிறைச்சாலைகளுக்கு நாத்தங்கால்கள் இக்காலப் பாடசாலைகள். இது கருதியோ சீனப் பழமொழி, இனிச் சிறைச்சாலைகள் மிகையென்ற பொருளில் பாடசாலைகளைப் பாராட்டலாயிற்று.


இனம்! இனம்!!

**வைத்திய வித்தியா**

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனா பஜார், மதராஸ்.



ஒட்டக்கூத்தர் பாடிய **தக்கயாகப் பரணி** மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

(உரையுடன்)

இதுவரையில் அச்சேறாத இவ்வரிய நூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.

விலாசம் :—கலாநிலயம்: 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.




# குறுந்தொகை

[788-வது பக்கத் தொடர்ச்சி]

நரிவெரூஉத் தலையார்] 236 [நெய்தல்

விரைய வருவதாகச் சொல்லி வரைவிடைவைத்துப் பிரியலுற்ற தலைவனுக்குத் தோழி சொல்லியது.

விட்டென விடுக்குநாள் வருக; அதுநீ
நேர்ந்தனை யாயின் தந்தனை சென்மோ,
குன்றத் தன்ன குவவுமண லடைகரை
நின்ற புன்னை நிலந்தோய் படுசினை
வம்ப நாரை சேக்குந்
தண்கடற் சேர்ப்ப,நீ யுண்டவெந் நலக்கே.

(உரை). (விரும்பியவாறு நீ சென்று, கருதிய கருமம்) முடிந்தவுடன், (உனதுமனம் உன்னை இங்கே மீள) விடுக்கு நாள், நீ மீளுக. அதற்கு நீ உடன்பட்டாயெனின், குன்றைப் போலத் திரண்டு குவிந்த மணல்மேடுகளையுடைய கடற்கரையிலுள்ள புன்னைமரத்தினது தரையிற் படும்படி தாழ்ந்த கிளையில் புதிய நாரைகள் வந்து தங்கும் குளிர்ந்த கடற்றுறைவ, நீ கவர்ந்து நுகர்ந்து கொண்ட எனது நலத்தைத் திருப்பிக்கொடுத்துவிட்டுப் போ.

நலக்கு - (உருபு மயக்கம்) நலத்தினை: அத்துச் சாரியை பெறாது வந்தது. 'என்னலத்தைத் தந்தனை சென்மோ' என்று கூட்டுக.

இறைச்சி:—'புன்னையின் நிலந்தோய் கிளைகளின் வம்ப நாரை சேக்கும்' என்றதால், பொருளீட்டக் கருதித் தலைவன் செல்லும் நாடு வேற்றுநாட்டார் வந்து இனிதுதங்குவதற்கேற்ற வசதிகளை உடைமையால், அவன் அங்கே நெடிது தங்கிவிடுவான் என்ற தன் ஐயத்தைக் குறிப்பித்தவாறும்.

அள்ளூர் நன்முல்லையார்] 237 [பாலை

பொருள்முற்றி மீளுந் தலைமகன் தேர்ப்பாகனுக்கு உரைப்பானாய்த் தன்னெஞ்சிற்கு உரைத்தது.

அஞ்சுவ தறியா தமர்துணை தழீஇ
நெஞ்சுநாப் பிரிந்தன் றாயினும் எஞ்சிய
கைபிணி நெகிழினஃ தெவனோ? நன்றும்
சேய, அம்ம, இருவா மிடையே;
மாக்கடற் றிரையின் முழங்கி வலனேர்பு
கோட்புலி வழங்குஞ் சோலை
எனைத்தென் றெண்ணுகோ முயக்கிடை மலையே

(உரை). (பொருளின் முட்டுப்பாட்டால் உண்டாம்) துன்பத்தைஅறியாது விரும்பிய காதலியைத் தழுவி (வேண்டிய இன்பத்தை வேண்டியவாறு) மனம் நுகருமாறு பொருளீட்டலைக் கருதி நான் பிரிந்ததாயினும் வலிகுறைந்த கை (குதிரையின் கடிவாளத்தைப்) பற்றிய பிடிப்பை நெகிழவிடுமாயின், அதனால் உளதாகும் தீங்கை என்னென்றுசொல்லுவேன்? இதனை நீ கவனித்துக்கேட்பாயாக. எம்மிருவருக்கும் இடையிலுள்ள தூரம் மிகவும் நெடியது; (தவிரவும்) கருங்கடலின் அலையைப்போல முழங்கி வலியுற்றெழுந்து கொலைசெய்யும் இயல்பினவாகிய புலிகள் சஞ்சரிக்கும் காடுகளையுடைய மலைகள் தலைமகளை நான் கூடுவதற்குத் தடையாக இடையில் எவ்வளவு உள்ளனவென்று கணக்கிட்டுச் சொல்லுவேன்? (நீ குதிரையைக் கடுகக் கடவுவாயாக)

அஞ்சுவது - அஞ்சுதல், அச்சம்; இங்கு அஞ்சுதற்குரிய துயரம் (ஆகுபெயர்). உண - உண்ண, இன்பம் நுகர. பிரிந்தன்று - பிரிந்தது. எஞ்சிய - வலி யெஞ்சிய. நன்றும்- மிகவும். இடை - இடைவெளி. வலன் ஏர்பு. முயக்கிடை - முயங்குதற்குத் தடையாக இடையிலுள்ள.

குன்றியனார்] 238 [மருதம்

நெடிது பரத்தையிற்பிரிந்து மீண்ட தலைவன், துனியுற்று முகங்கொடாது நின்ற தலைமகளைப் பொய்ச்சூள் பலகூறித் தன்னைத் தவறிலனாகத் தெளிப்பவுந் தெளியாது அவள் கூறியது.

பாசவ லிடித்த கருங்கா ழுலக்கை
ஆய்கதிர் நெல்லின் வரம்பணைத் துயிற்றி
ஒண்டொடி மகளிர் வண்ட லயருந்
தொண்டி யன்ன வென்னலந் தந்து
கொண்டனை சென்மோ, மகிழ்நநின் சூளே.

(உரை). மகிழ்ந, நீ முன்னும் இன்றும் எனக்குத் தந்த பொய்ச்சூள்களை வாங்கிக்கொண்டு, பசுமையான அவலை இடித்த கரிய வயிரங்கொண்ட உலக்கையைக் (குழந்தையாகப் பாவித்து) நெல்லின் கதிர்கள் சாய்ந்த வரம்பாகிய படுக்கையிலே கிடத்தி(த் துயிலச்செய்து) ஒள்ளிய வளையல்களை அணிந்த சிறுமகளிர் பாவைவிளையாட்டை ஆடும் 'தொண்டி'க்கு நிகரான எனது (முன் நீ நுகர்ந்து சிதைத்த) நலத்தைத் திருப்பிக்கொடுத்துவிட்டு, நீ விரும்பியவரிடத்தே செல்க.

பாசவல் - பசுமை அவல். காழ்-உள்வயிரம். வரம்பணை - வரம்பாகிய அணை. மகளிர் - மருதநிலத்துச் சிறுமிகள். வண்டல்- விளையாட்டு. தொண்டி - தொண்டி என்னும் பட்டினம். மகிழ்நன் - மருதநிலத்தலைவன்; இதற்குக் 'கணவன்' என்ற பொருளும் உளதாயினும், இங்கே தலைமகள் தலைவனை ஒரேதிலனாகவே கருதிப் பொதுவாக 'மருதநிலத் தலைவ' என்று விளித்தாள் என்க.

'முன்பு களவொழுக்கக் காலத்தில் நீ பல பொய்ச்சூளுரைத்து என்னை மருட்டி என்னலத்தையெல்லாம் உண்டொழிந்தாய். பரத்தையிற் பிரிந்து மீண்டு இன்னும் என்னை நயமொழி கூறி வஞ்சிக்கலுற்றாய். உனதன்புக்கு உரியளல்லாத என்னினீங்கி, உனது காதலுக்குரியாரிடம் நீ செல்க; என்னை அணுகற்க' என்று தலைமகள் பிணங்கியதாம்.

ஆசிரியர் பெருங்கண்ணனார்] 239 [குறிஞ்சி

வரையாதொழுகும் தலைமகன் வந்து சிறைப்புறத்தானாக, அதனை உணர்ந்த தலைமகள் ஊரெடுத்த அலரால் தானுற்ற துன்பநிலையை அவனுக்கு உணர்த்தக்கருதித் தோழிக்கு உரைத்தது.

தொடிநெகிழ்ந் தனவே; தோள்சா யினவே;
விடுநா ணுண்டோ, தோழி; விடர்முகைச்
சிலம்புடன் கமழும் அலங்குகுலைக் காந்தள்
நறுந்தா தூதுங் குறுஞ்சிறைத் தும்பி
பாம்புமிழ் மணியிற் றோன்றும்
முந்தூழ் வேலிய மலைகிழ வோற்கே.

(உரை). தோழீ, குகைகளின் தொகுதியையுடைய மலையும் மணங்கமழ்வதற்குக் காரணமான அசையும் பூங்குலைகளையுடைய செங்காந்தளின் நறுந்தாதைக் குடைந்துண்ட சிறியசிறகுகளையுடைய வண்டு பாம்புமிழ்ந்த மாணிக்கம் போலத் தோன்றும், மூங்கில் வேலியையுடைய மலைநாடனால் எனது வளையல்கள் நழுவலுற்றன; தோள்கள் மெலிவுற்றன; நம்மை விட்டகன்ற நாணமும் அழிதலுற்றது. (இதனை அவர் உணர்ந்தாரல்லர்).

உளதோ - நிலைத்துளதோ? இல்லை என்றபடி. 'விடர்முகை'கீழ் 218ம் பாட்டின் குறிப்பைப் பார்க்க. சிலம்புடன் கமழும்-தன்னுடன் சிலம்புங் கமழுங் காந்தள். ஊதும் -

குடைந்துண்ணும். காந்தளின் செம்பராகம் படிந்து கரு வண்டுகள் மாணிக்கம் போலத் தோன்றலாயின. மூங்தாழ்-மூங்கில். மலைகிழவோன் - மலைக்குரியவன்; மலைநாடன். கிழவோற்கு-(உருபு மயக்கம்) கிழவனால்; கிழவன் வரைந்து கொள்ளாதொழுகும் களவொழுக்கத்தால்.

---

கொல்லன்அழிசியார்] 240 [முல்லை

*தலைமகனது பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.*

> பனிப்புத லிவர்ந்த பைங்கொடி யவரைக்
> கிளிவா யொப்பின் ஒளிவிடு பன்மலர்
> வெருக்குப்பல் லுருவின் முல்லையொடு கஞலி
> வாடை வந்ததன் றலையும் நோய்பொரக்
> கண்டிசின், வாழி தோழி, தெண்டிரைக்
> கடலாழ் கலத்திற் றோன்றி
> மாலை மறையுமவர் மணிநெடுங் குன்றே.

(உரை). பனித்துளிகள் படிந்த தூறுகளின்மீது படர்ந்த பசிய கொடியாகிய அவரையின் கிளியின்மூக்கைப் போல விளைந்த,ஒளியைவிடும் பலமலர்கள்,காட்டுப்பூனையின் பல்லை யொத்த முல்லைமலர்களுடன் நெருங்கிப் பொலிவுறும்படி வாடைக்காற்று வந்ததன்மேலும் துன்பம் அதிகரிக்கும்படி நங்காதலர் வாழுமிடமாகிய அழகிய நெடிய குன்றம் இம்மாலைக் காலத்தில் தெளிந்த திரைகளையுடைய கடலில் அழுந்துங் கப்பலைப்போலத் தோன்றி மறைந்தது. தோழி, நீ காண்பாயாக.

'கிளிவாய் ஒப்பு' வடிவத்தால். வெருக்குப் பல்லொப்பு, நிறத்தாலும் வடிவாலும். கஞலி - கஞல. மணி - அழகு.

பகற்காலத்தில் நன்றாகப் புலப்பட்டுப் பொழுதாகவாகக் கொஞ்சங்கொஞ்சமாய் மறைந்து சூரியன் நீங்கிய அந்திப் பொழுதில் முற்றும் தோன்றாதுமறையும் மலைக்குக் கடலில் மெல்ல முழுகுங் கப்பல் உவமை. குளிர்வாடை வீசுங் கூதிர்க்காலத்தில் தலைவன்வரக் காணப்பெறாவிடினும் அவனுறையுங் குன்றையேனுங் கண்ணுற்று ஆற்றியிருந்தேன். அதுவும் கண்ணுக்குப் புலப்படாதவாறு மாலைப்பொழுதும் வந்துவிட்டது. இனி எங்ஙனம் நான் ஆற்றகிற்பேன்? என்று தலைவி வருந்தியவாறும்.

---

கபிலர்] 241 [முல்லை

*இதுவும் அது*

> யாமெங் காமந் தாங்கவுந் தாந்தங்
> கெழுதகை மையின் அழுதன, தோழி,
> கன்றாற் றுப் படுத்த புன்றலைச் சிறார்
> மன்ற வேங்கை மலர்பத நோக்கி
> ஏறா திட்ட வேமப் பூசல்
> விண்டோய் விடரகத் தியம்புங்
> குன்ற நாடற் கண்டவெங் கண்ணே.

(உரை). நான் எனது காமநோயை (வெளிக்காட்டாது) பொறுத்துக்கொண்டு இருப்பினும், கன்றுகளை மேய்ச்சற்றலைக்கு ஓட்டிச்சென்ற சிவந்த மயிர்த்தலையையுடைய இடைச்சிறார் வேங்கைமரம் மலருங்காலத்தை நோக்கி மேலேறாது கீழிருந்தே செய்யும் மகிழ்ச்சிப்பேரொலி விண்ணையளாவும் அம்மலையினுச்சியிலுள்ள முழைகளின் உட்புகுந்து எதிரொலியை எழுப்புங் குன்றுகளையுடைய மலைநாடனை முன் கண்டுகளித்த (என்) கண்கள் தமது நட்புரிமையினால் அழுகின்றன, தோழி. (அதற்கு யான் என் செய்கேன்?)

யாம், எம், என்றது தலைமகள் தோழியையும் உளப்படுத்திக் கூறியது. கெழுதகைமை - நட்பு; உரிமை. புன்தலை - செவந்த, அல்லது புற்கென்ற, தலை. 'மன்ற'-அசை. ஏமம்-களிப்பு, சந்தோஷம். பூசல் - பேரிரைச்சல். விடர் - குகை. இயம்பும் - ஒலிக்கும்.

---

குழற்றத்தனார்] 242 [முல்லை

*கடிமணமான கற்பொழுக்குக் காலத்தில் தலைவனது ஊரில் வாழ்ந்த தலைமகளைக் காணச்சென்ற செவிலித்தாய் கண்டுவந்து தலைவிமாட்டுத் தலைவனுக்குள்ள அன்பின் மிகுதியை நற்றாய்க்குச் சொல்லியது.*

> கானங் கோழி கவர்குரற் சேவல்
> நுண்பொறி யெருத்திற் றண்சித ருறைப்பப்
> புதனீர் வாரும் பூநாறு புறவிற்
> சீறா ரோளே மடந்தை; வேறூர்
> வேந்துவிடு தொழிலொடு செல்லினும்
> சேந்துவர லறியாது செம்மல் தேரே.

(உரை). விரும்புங் குரலையுடைய கானங்கோழிச் சேவலின் நுண்ணிய புள்ளிகளையுடைய மேற்கழுத்தில் குளிர்ந்த பனித்திவலைகள் சிந்தும்படி தூறுகள் நீரை வார்க்கும் பூக்கள் மலர்ந்து மணம் வீசும் முல்லைநிலத்துச் சிற்றூரிலே இருக்கின்றாள் உன் மகள்; வேந்தன் இட்ட வினையின்மேல் வேற்றூர்க்குச் சென்றானாயினும் அவனுடைய தேர் அங்கே (ஓரிரவும்) தங்கியிருத்தலை அறியாது.

சிதர் - நீர்த்துளி, அல்லது திவலை. புறவு - முல்லைநிலம். வேறூர் - வேற்றூர். தொழிலொடு - உருபுமயக்கம். சேந்து-தங்கி; இரவிற்றங்கி. 'வேறூர்...செல்லினும்...... சேந்து வரல் அறியாது - செம்மல் தேர்' என்றது அவனுக்கு அவள் மாட்டுள்ள பெருங்காதலையும், பேரன்பையும் எடுத்துக் காட்டியது. 'ஒண்பொறி,' 'அரியது',என்பன பாடபேதம்.

---

நம்பி குட்டுவனார்] 243 [நெய்தல்

*பிரிவிடை ஆற்றாளாகிய தலைமகள் தன்னை 'ஆற்றியிரு' என்று வற்புறுத்திய தோழிக்கு எதிரழிந்து சொல்லியது.*

> மானடி யன்ன கவட்டிலை யடம்பின்
> தார்மணி யன்ன வொண்பூக் கொழுதி
> ஒண்டொடி மகளிர் வண்ட லயரும்
> புள்ளிமிழ் பெருங்கடற் சேர்ப்பனை
> உள்ளேன், தோழி; படீஇயரென் கண்ணே.

(உரை). மானின் அடியைப்போலப் பிளவுபட்ட இலைகளையுடைய அடம்பினது கிண்கிணிச் சதங்கையை யொத்த ஒள்ளிய பூக்களைப் பறித்து, ஒளிபொருந்திய வளையல்களை அணிந்த சிறுமிகள் விளையாடுவதும் அன்னமுதலிய பறவைகள் ஒலிப்பதுமான பெரிய நெய்தனிலத் தலைவனை இனி நான் நினையேன்; என் கண்கள் இனி உறங்குவனவாக.

படீஇயர் - படுவனவாக. கண்படுதல் - துயிலுதல்.

---

கண்ணனார்] 244 [குறிஞ்சி

*இரவுக்குறி வந்தொழுகாநின்ற தலைமகனுக்குத் தோழி முன்னாளிரவில் தலைமகள் வீட்டைவிட்டு வெளிப்போவதற்கு நேர்ந்த இடையூற்றைக் கிளத்தி இனி வரைந்து கொள்ளினல்லது தலைமகளைக் கூடப்பெறுவது அரிதாமெனக் கூறி அவனை வரைவுகடாயது.*

> பல்லோர் துஞ்சு நள்ளென் யாமத்
> துரவுக் களிறு போல்வந்
> திரவுக் கதவு முயறல்
> கேளே மல்லேம், கேட்டனெம், பெரும;
> ஓரி முருங்கப் பீலி சாய
> நன்மயில் வலைப்பட் டாங்கியாம்
> உயங்குதொறும் உயங்கும் அறனில் தாயே.

(உரை). பலருந் துயிலும் நடுராத்திரியில் வலிபொருந்திய களிறுபோல வந்து கதவை மெள்ளத் தட்டி உனது வரவையுணர்த்த முயலுதலை நாங்கள் கேளாதிருந்தோம் அல்லோம்; கேட்டோம்; பெருந்தகையே; சிறகின் மயிர்கள்



உதிரப் பீலி சாய நல்ல மயில் வேடனது வலையிற் சிக்குண்டாற்போல நாங்கள் காவலிடைப்பட்டு வருந்தும்போதெல்லாம் அறனற்ற தாயும் (விழித்திருந்து) வருந்துவாள்.

நள்ளென் யாமத்திரவு, எனக்கூட்டுக. கதவு-(ஆகுபெயர்) கதவைத்தட்டி வரவை உணர்த்தல். ஓரி - மயிர்ப்போது; நிறமுமாம். உயங்குதல் - வருந்துதல், 'அறனில் யாய்' என்றாள் அவர்களின் கூட்டத்துக்கு இடையூறாக விழித்து இருந்ததுபற்றி.

---

மாலை மாறனார்] 245 [நெய்தல்

*வரைவிடை எழுந்த அலரால் தலைமகள் ஆற்றாது வருந்துவாள் என்று கவன்ற தோழிக்கு அவள் உரைத்தது.*

> கடலங் கான லாயம் ஆய்ந்தவென்
> நலமிழந் ததனினும் நனியின் னாதே,
> வாள்போல் வாய கொழுமடற் றாழை
> மாணில வென்னாட்டு வேலி யாகும்
> மெல்லம் புலம்பன் கொடுமை
> பல்லோ ரறியப் பரந்துவெளிப் படினே.

(உரை). கடற்கானலிடத்து (விளையாடும்) மகளிர் கூட்டம் ஆய்ந்து நோக்கற்கொத்த எனது அழகையெல்லாம் நான் இழந்ததைக் காட்டிலும், முள்வாளின் வாயைப் போன்ற கொழுத்த மடல்களையுடைய தாழைகள் வேலியாகும் நெய்தனிலத் தலைவனான தலைமகனது கொடுமை பெரிய நிலத்திடத்துள்ள எனது ஊரில் பல்லோரும் அறியும்படி பரந்து வெளிப்பட்டுவிடின், மிகுந்த துன்பத்தைத் தருவதாகும்.

ஆயம் - தனது தோழியர் கூட்டம். வாள் - அறுக்கும் வாள், the saw. மெல்லம் புலம்பன் - மென்னிலமாகிய நெய்தனிலத் தலைவன். கொடுமை - வஞ்சித்துக் கூடி வரைந்துகொள்ளாதொழுகும் களவொழுக்கம்.

இறைச்சி:—வேலியாகிய தாழை முள்வாய்ந்த மடல்களை உடைத்தானாற்போலத் தனக்குக் காவலாகித்தன்னைச் சூழ்ந்தோரெல்லாம் கொடுமொழி கூறும் இன்னாதவாயினராய் இருக்கின்றார் என்பது.

---

கபிலர்] 246 [நெய்தல்

*சிறைப்புறத்தானாகிய தலைமகனுக்கு உணர்த்துங் கருத்தால் தோழிக்குத் தலைமகள் தன்னிலையை எடுத்துரைத்தது.*

> பெருங்கடற் றிரையது சிறுவெண் காக்கை
> களிற்றுச் செவியன்ன பாசடை மயக்கிப்
> பனிக்கழி துழவும் பானாள் தனித்தோர்
> தேர்வந்து பெயர்ந்த தென்ப, அதற்கொண்
> டோரும், அலைக்கும் அன்னை; பிறரும்
> பின்னுவிடு கதுப்பின் மின்னிழை மகளிர்
> இளையரும், மடவரும் உளரே,
> அலையாத் தாயரொடு நற்பா லோரே.

(உரை). பெரிய கடலின் திரையினிடத்துச் சிறுவெண் காக்கை யானையின் காதைப்போன்ற பசிய தாமரையிலைகளைக்கெடுத்துக் குளிர்ந்தகழியில் மீனைத்துழாவிப் பார்க்கும் நடுநிசியில் ஒரு தேர் தனித்துவந்து பின்பு பெயர்ந்தது என்பர்: அதைக்கொண்டு என் தாய் ஆராயப்புகுவாள்; (என்னிடத்து ஐயமுற்று) என்னை வருத்த ஆரம்பிப்பாள். பின்னிவிட்ட கூந்தலையும் ஒளிவீசும் அணிகளையும் உடைய இளைமையோடும் மடப்பத்தோடுங் கூடிய மகளிர் தம்முள் (என்னைப் போலாது) தாய்மாரால் அலைப்புறாத நல்வினையினர் பிறரெவரேனும் உளரோ?

பாசடை - பசுமை அடை. அடை - இலை. மயக்கி - கெடுத்து, அழித்து, சிதைத்து. 'வள்ளையாய் கொடி மயக்கி வாளை மேய்ந்த' (அகம், 6); 'நெய்தல் மயக்கி வந்தன்று கொண்கனதேர்'' (ஐங்குறு. 101).

---

சேந்தன்பூதனார்] 247 [குறிஞ்சி

*தலைமகளின் தமர் தலைமகனுக்கு வரைவுடம்பட்டதைத் தோழி தலைமகளுக்கு உணர்த்தியது.*

> எழினி மிகவுடைய தீங்கனிப் படூஉந்
> திறவோர் செய்வினை அறவ தாகும்.
> கிளையுடை மாந்தர்க்குப் புணையுமா றில்லென
> ஆங்கறிந் திசினே, தோழி, வேங்கை
> வீயா மென்சினை வீயுக யானை
> ஆர்துயி லியம்பு நாடன்
> மார்புரித் தாய மறுவி னட்பே.

(உரை). 'எழினி அதியமான்' என்பவன் ஔவைக் கீந்த மிக்க பெருமையினையுடைய இனிய கருநெல்லிக் கனியைப் பெறச்செய்யும் திறத்தினை யுடையவர் செய்த வினை புண்ணியமே ஆகும். அதுபோல, வேங்கை மரத்தின் கெடாத மெல்லிய கிளையிலுள்ள பூக்கள் மேலே உதிர்வதினால் யானையினது நல்ல தூக்கம் கெடும் மலைநாடனது மார்புக்குரியவளான உனது குற்றமற்ற நட்புக்குரிய நன் மணத்தை (அவனையன்றி) உறவினராகிய வேறெவரும் பெறுமாறு இல்லை. தலைமகனே அதனைப் பெறும் பெரும் பேறுடையான் என்று நான் அறிந்தேன். (நீ இனிக் கவலற்க).

எழினி - அதியமான் நெடுமானஞ்சி; கடையெழுவள்ளல்களி லொருவன்; உண்டார்க்குநெடுங்காலம் வாழ்தலைச் செய்யுங் கருநெல்லிக்கனியைப் பெற்று அதனை ஔவைக்குக் கொடுத்தவன். இதனை ஔவையார்

> நீயே தொன்னிலைப்
> பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
> சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
> தாதல் நின்னகத் தடக்கிச்
> சாதல் நீங்க எமக்கீந் தனையே—(புறம் - 91)

என்று புகழ்ந்து பாராட்டியிருக்கின்றார். இவ்வரலாறு பத்துப் பாட்டிலும்.

> மால்வரைக்
> கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி
> அமிழ்துவிளை தீங்கனி ஔவைக் கீந்த
> அரவக்கடற் றானை அதிகனும்—(சிறுபாண், 99-103)

என்று கூறப்பட்டிருக்கின்றது. மிகவுடைய - சாதலைத் தவிர்க்குஞ் சிறப்பினை மிகவும் உடைய. படூஉம் - படுத்தும், அகப்படும்படி செய்யும்; 'படூஉஞ் செய்வினை' எனச்சேர்க்க. அறவது - அறமது. அறம் - நல்வினை, புண்ணியம். எழினியின் நெல்லிக்கனியைப்பெறுதல் பெரும்புண்ணியம் புரிந்துளோர்க்கன்றி நேராமைபோல, உன்னைவரைந்து கொள்ளும் பாக்கியம் நாடனுக்கன்றிப் பிறரெவர்க்குங்கிட்டாது என்பது முதலிரண்டடிகளின் உட்கருத்து.

கிளை - உறவு. ஆங்கு, 'அசை.' அறிந்திசின்-அறிந்தேன். மார்பு -(ஆகு பெயர்) மார்பைத் தழுவிக் கூடுதல். நட்பு-இங்குக் கணவனுக்கும் மனைவிக்குமுள்ள நேசத்தொடர்பு.

---

உலோச்சனார்] 248 [நெய்தல்

*வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகளைத் தோழி ஆற்றுவித்தது.*

> அதுவர லன்மையோ அரிதே; அவன்மார்
> பிறுக வென்ற நாளே குறுகி
> ஈங்கா கின்றே, தோழி; கானல்
> ஆடறை புதையக் கோடை யிட்ட
> அடம்பிவர் மணற்கோ டூர நெடும்பனை

குறிய வாகுந் துறைவனைப்
பெரிய கூறி யாயறிந் தனளே.

(உரை). கானலிடத்து நுளைச்சிப்பெண்கள் விளையாடுவதற்கிழைத்த சிற்றில்கள் மூடுண்டு மறையும்படி மேற்காற்று அடித்துக் குவித்த, அடம்பங்கொடிகள் மேற்படர்ந்த மணற்குன்றுகள் மேலெழுந்ததினால் பக்கத்திலுள்ள நெடிய பனமரங்கள் குறியனவாகத் தோன்றும் துறைவனாகிய தலைவனை (நான் என்னுடைய தாய்க்கும், அவள் உனது தாய்க்கும் அறத்தொடு நின்றமையால்) உனது நற்றாய் அறிந்து பெரிதும் புகழ்ந்து ஏற்றுக் கொண்டுவிட்டாள். ஆகையால், இனி வரைவு நேராதிருத்தலோ இல்லை. அவனது மார்பை (இடையீடின்றி) இறுகத் தழுவவேண்டுமென்று நீவிரும்பிய நாளும் நெருங்கிவிட இங்கு மணவினைக்குரிய ஏற்பாடுகள் நிச்சயமாகச் சில நாளில் நடைபெறும்.

அது - வரைவு. இறுக - இறுகத்தழுவ. ஆகின்று-'மணவிழாவுக்குரிய முன்னேற்பாடு' என்று எழுவாய் வருவித்துக் கொள்க; துணிபு பற்றி இறந்தகாலத்தாற் கூறினள். ஆடு - விளையாடும். அறை - சிற்றில்:

அறையும் ஆடரங்கும் மட்ப்பிள்ளைகள்
தறையிற் கீறிடிற் றச்சருங் காய்வரோ.

என்றார் கம்பநாடரும். கோடை - மேல்காற்று.

---

கபிலர்] 249 [குறிஞ்சி

வரைவிடைவைத்துத் தலைமகன் பிரிந்தவிடத்து, 'நீ ஆற்றகிற்றியோ?' என்று தன்னை வினவிய தோழிக்குத் தலைமகள் தான் ஆற்றுமாறுணர்த்தியது.

இனமயி லகவும் மரம்பயில் கானத்து
நரைமுக வூகம் பார்ப்பொடு பனிப்பப்
படுமழை பொழிந்த சாரலவர் நாட்டுக்
குன்றம் நோக்கினேன், தோழி;
பண்டை யற்றோ கண்டிசின் நுதலே.

(உரை). மயிலினம் ஆடும் மரங்கள் செறிந்த காட்டில் மயிர்நரைத்த முகத்தையுடைய குரங்கு தன் குட்டியோடு குளிரால் நடுங்கும்படி பெருமழை பொழிந்த சாரலையுடைய அவர் நாட்டிலுள்ள குன்றை நோக்கினேன், தோழி; (அதனால் ஒருவாறு ஆறுதலை அடைந்தேன்.) எனது நுதல் முன்போலப் பசப்புற்றுத்தான் இருக்கின்றதா? (அல்லது பசப்பு மாறிவிட்டதா) நீ பார்த்துச் சொல்.

குன்றத்தை நோக்கலே பிரிந்த தலைமகனைக் கண்டாற்போலத் தனது துயரத்தை ஆற்றுவித்தது, அதனால் தனது நுதலின் பசப்பு மாறியிருக்கும் என்று நினைத்துத் தன் தோழியைத் தலைவி 'பண்டையற்றோ கண்டிசின் நுதலே' என்றாள் என்க.

---

நாமலார் மகனார் இளங்கண்ணனார் } 250 [பாலை

வினைமுற்றி மீளுந் தலைவன் தேரை விரைந்து கடவுமாறு பாகனுக்குச் சொல்லியது.

பரலவற் படுநீர் மாந்தித் துணையோ
டிரலை நன்மான் நெறிதனி னுகளும்
மாலை வாரா வளவைக் காலியற்
கடுமா கடவுமதி, பாக, நெடுநீர்ப்
பொருகயல் முரணிய உண்கட்
தெரிதீங் கிளவி தெருமரல் உகவே.

(உரை).பரல் செறிந்த பள்ளங்களிலுள்ள நீரைக்குடித்துப் பிணையோடு ஆண்மான் வழிகளில் துள்ளித்திரியும் மாலைப் பொழுது வருவதற்கு முன்னமே, கடலிற் பொருகின்ற கயல்போன்ற மையுண்ட கண்ணையும் தெரிந்த இனிய சொற்களையுமுடைய காதலியின் துயரம் ஒழியுமாறு காற்றின்வேகம் பொருந்திய குதிரையை, பாக, நீ விரையக் கடவுவாயாக.

வாரா அளவை - வருமுன். கால் - காற்று. இயல் - தன்மை, குணம். நெடுநீர் - கடல்; பெரிய ஆறுமாம். முரணிய - ஒத்த; ஓ ருவமவாசகம்; பகைத்த, என்றுமாம். தீங்கிளவி - அன்மொழித்தொகை.

---

இடைக்காடர்] 251 [முல்லை

கார்காலம் வந்துந் தலைவன் வாராமையால் பிரிவாற்றாது வருந்திய தலைவியை, 'இது உண்மையான கார்கால மழை அன்று; வம்பமாரி' என்று சொல்லித் தோழி ஆற்றுவித்தது.

மடவ வாழி; மஞ்ஞை யாயினம்
கால மாரி பெய்தென அதனெதிர்
ஆலலும் ஆலின; பிடவும் பூத்தன;
காரன் றாகுவளே; தீர்கநின் படரே;
கழிந்த மாரிக் கொழிந்த பழநீர்
புதுநீர் கொளீஇய உகுத்தரும்
நொதுமல் வானத்து முழங்குகுரல் கேட்டே.

(உரை). புதுநீரை முகந்துகொள்ளும்பொருட்டுச் சென்ற கார்காலத்தில் (பெய்துவிட்டு) எஞ்சிய பழநீரை உகுக்கும் அயலாகிய மேகத்தின் இடிமுழக்கத்தைக் கேட்டு, கார்காலத்து மழை பெய்ததென்று எண்ணி அதனெதிரில் அழகிய மயில்களும் ஆடின; பிடவங்களும் பூத்தன; அவை (மிகவும்) அறியாமையை உடையனவே; கைவளைகள் கழல்பவளே, இது (உண்மையில்) கார்காலம் அன்று; (வம்ப மாரியே); உனது துன்பத்தை நீ ஒழிவாயாக.

மடவ - அறியாமையை உடையன. வாழி - அசை. ஆய் இனம் - ஆய், அழகு. உகுவளை - அன்மொழித்தொகை; விளி. நொதுமல் - அயல்; நொதுமல்வானம் - அயலாகிய, மேகம். 'காரன்றிகுளை' 'நொதுமலர் வானம்' என்பன பாடபேதம்

---

கிடங்கிற் குலபதினைக்கண்ணனார்] 252 [குறிஞ்சி

பரத்தையிற் பிரிந்த தலைமகன் மனைக்கண் வந்ததை அறிந்த தோழி தலைமகளை, 'நம்மை வலிந்தகன்று போயினார்க்கு நீ நியன கடிந்து நன்றாற்றினாய்' என்றாளுக்கு அவள் உரைத்தது.

'நெடிய திரண்ட தோள்வளை நெகிழக்
கொடிய னாகிய குன்றுகெழு நாடன்
வருவதோர் காலையின் முகந்திரி யாது
கடவுட் கற்பின் அவனெதிர் பேணி
மடவை மன்ற நீ, யெனக் கடவுபு
துனியல், வாழி தோழி; சான்றோர்
புகழு முன்னர், நாணுர்;
பழியாங் கொல்பவோ, காணுங் காலே.

(உரை). 'நெடிய திரண்ட தோள்களிலணிந்த வளைகள் நெகிழ்ந்து விழும்படி கொடுமை புரிந்து அகன்ற மலை நாடன் திரும்பி வந்தபோது தெய்வத்தன்மை வாய்ந்த கற்பால் முகங்கோணுமல் அவனை வரவேற்று அவனையே (தெய்வமென்று) பேணி, நீ மிகவும் அறியாமையை உடையவளாயினாய்' என்று கடிந்து கூறி என்னைப் பிணங்கும்படி தூண்டி (அவ்வாறு நான் செய்யாமையால்) என்மீது சீற்றங் கொள்ளாதே,தோழி. அவரோ உயர்ந்தோர் மதிக்கும் புகழையும்எண்ணார், தகாச்செயலென்று நாணவுமாட்டார்; ஆராய்ந்து பார்த்தால் அவரைப் பழிதான் எப்படிப் பொருந்தும்?

கொடியன் - காதலியைக் கைவிட்டுப் பரத்தையரைக் காதலித்த கொடியவன். கடவுபு - கடவி, தூண்டி, ஊக்கி.



யாங்கு - எங்கு, யாங்ஙனம்.'புகழூமுன்னர் நாணுப்' என்ற பாடத்துக்கு இனிது பொருள் விளங்கவில்லை.

---

பூங்கண்ணனார்] 253 [பாலை

தலைமகனது பிரிவிடை வருந்துந் தலைமகளைத் தோழி வற்புறுத்தித் தேற்றியது.

கேளா ராகுவர், தோழி; கேட்பின்
விழுமிது கழிவ தாயினும் நெகிழ்நூற்
பூச்சே ரணையிற் பெருங்கவின் தொலைந்தநின்
நாட்டுயர் கேட்பின் நீடலர், மாதோ;
ஒலிகழை நிவந்த ஓங்குமலைச் சாரற்
புலிபுகா வுறுத்த புலவுநாறு கல்லளை
ஆறுசெல் மாக்கள் சேக்குங்
கோடுயர் பிறங்கல் மலையிறந் தோரே.

(உரை). மலர் பரப்பிய படுக்கையில் துயில்கொள்ளாது, நெகிழ்ந்த துகிலோடுகூடிய பேரழகு சிதைந்த நினது புதிய துயரத்தைக் கேட்டிலர் போலும்; கேட்டிருப்பாராயின் மேலானதொரு காரியம்கெட்டுப்போவதாயினும்,பிறகுகாலந் தாழ்க்கார்; தழைத்த மூங்கில்கள் ஓங்கி வளர்ந்த மலைச்சாரலிடத்துப் புலிபுகுந்து விலங்கைக் கொன்றுதின்று உண்டாக்கிய புலால்நாற்றம் தங்கிய மலை முழைஞ்சில் வழிப்போகுஞ் சனங்கள் (இளைப்பாறுவதற்காகத்) தங்கும் கொடுமுடிகள் உயர்ந்த விளங்குதலையுடைய மலையைக் கடந்து சென்ற நங்காதலர். இதனைக்கேள்.(கேட்டுத் தெளிந்துநீஆற்றியிரு).

முதலடியிலுள்ள 'கேட்பின்' என்பதைக் 'கேள்; பின்' எனப் பிரித்து,'பின்' என்பதை நான்காமடியிலுள்ள 'கேட்பின் என்பதின் பின்னர்க்கூட்டுக. நூல்-(ஆகுபெயர்) நூலாலிழைத்த துகில். 'நெகிழ்நூல் நின்' எனக் கூட்டுக. நாட்டுயர்-நாள் தோறும் படுந்துயர் என்றுமாம், மாதோ - அசை. புகா உறுத்த-புகுந்து உண்டாக்கிய. சேக்கும்-தங்கும். பிறங்கல் - பிறங்குதல், விளக்கம்.

---

பாரகாபனார்] 254 [பாலை

இளவேனிற் பருவம் வரக்கண்டு வருந்திய தன்னைக் 'குறித்தபடி தலைவர் தவறாமல்வந்திடுவர், வந்திடுவர்; ஆற்றியிரு, ஆற்றியிரு' என்று சொல்லி வற்புறுத்திய தோழிக்குத் தலைமகள் தனதாற்றாமை புலப்படக் கூறியது.

இலையி லஞ்சினை இனவண் டார்ப்ப
முலையேர் மென்முகை யவிழ்ந்த கொங்கின்
றலையலர் வந்தன; வாரா, தோழி;
துயிலின் கங்குற் றுயில்வரல் மறந்தன;
பயிலிருங் கதுப்பிற் பாயலும் உள்ளார்,
செய்பொரு டாலசைஇச் சென்றோர்
எய்தின ராலென வரூஉந் தூதே.

(உரை). முன்பு இலையில்லாத அழகிய கிளைகளில் வண்டுக் கூட்டங்கள் வந்து ஒலிக்கும்படி மகளிர் முலையைப் போன்ற மெல்லிய அரும்புகள் முறுக்குடைந்துவிரிந்த மலர்கள் கோங்குமரத்தில் பூக்கலாயின. அதனால் தூக்கம், துயிலுவதற்குரிய இரவில் வருவதை மறந்துவிட்டது. முன் தாம் பயின்ற கரிய கூந்தலாகிய அணையின்மீது படுப்பதை நினையாது பொருளையீட்டிக்கொண்டு வருதலை விரும்பிச் சென்ற காதலர் மீண்டாரென்பதைத் தெரிவிக்கவருந் தூதரெவரும் வந்திலர்.

இலையில் -இலையுதிர்ந்த. 'முலையேர் மென்முகை'-கோங்கினரும்பை மகளிர்முலைக்கு உவமையாகக் கூறுவதை,

கோங்கு முகைத்தன்ன குவிமுலை யாகத்து—(240)

என்ற அகப்பாட்டான் அறிக. இது பாலைத்திணைக்கு உரியதென்பதை, ஐங்குறுநூற்றில்,

வண்சினைக் கோங்கின் தண்கமழ் படலை
இருஞ்சிறை வண்டின் பெருங்கிளை மொய்ப்ப

என்ற 370-ம் பாட்டின், 'இது, பாலைக்குரிய கருப்பொருளாகிய கோங்கு கூறினமையால் பாலை ஆயிற்று' என்ற பழையவுரையாலும், இளவேனிற் காலத்திற் பூக்கும் இயல்பினதாதலை, ஐங்குறுநூற்றின் 'இளவேனிற் பத்து' என்ற பகுதியிலுள்ள,

அவரோ வாரார், தான்வந் தன்றே
திணிநிலைக் கோங்கம் பயந்த
அணிமிகு கொழுமுகை உடையும் பொழுதே.

என்ற பாட்டாலும் ஓர்க. 'கொங்கின் தலை' - தலை, ஏழாம் வேற்றுமை உருபு. 'வாரா' என்ற வினைமுற்றுக்கு எழுவாய் ஈற்றடியிலுள்ள 'தூது'. பாயல் - துயிலுதல். செய்பொருள் தரல் நசை இ. எய்தினரால்,-ஆல், அசை. தூது - பொருளான் உயர்திணையாயினும் சொல்லான் அஃறிணையாதலின், 'வாரா' என்ற பன்மைவினையைக் கொண்டது.

அலர் வந்தன; துயில் வரல் மறந்தன; வரும் தூது வாரா; என முடிக்க.

---

கடுகு பெருந்தேவனார்] 255 [பாலை

தாஞ் சென்ற காட்டிடை அன்புறுத்துந் தகையன கண்டு தலைவர் மீள்வரெனச் சொல்லி தோழி ஆற்றாது கவன்ற தலைவியை வற்புறுத்தியது.

பொத்தில் காழ அத்த யாஅத்துப்
பொரியரை முழுமுத லுருவக் குத்தி
மறங்கெழு தடக்கையின் வாங்கி,உயங்குநடைச்
சிறுகட் பெருநிரை யுறுபசி தீர்க்குந்
தடமருப் பியானை கண்டனர், தோழி,
கடன்கடன் இறீஇய ரெண்ணி இடந்தொறுங்
காமர் பொருட்பிணிப் போகிய
நாம்வெங் காதலர் சென்ற வாறே.

(உரை). பலதிறத்தார்மாட்டும் தாம் செய்யக்கடவனவாகிய கடன்களைச் செலுத்தும்பொருட்டு விரும்பத்தக்க பொருளை ஈட்டுமாசையால் அகன்ற நாம்விரும்புங் காதலர் சென்ற காட்டுவழியில்,உள்ளே துளையில்லாதபடி வயிரத்தையும் பொரியரையையும் உடைய யாமரத்தின் மூலவேரை நன்றாய்ப் பாயும்படி கொம்பாற்குத்தி வலிபொருந்திய தனது விசாலமான துதிக்கையாலே பறித்தெடுத்து, வருந்தும் நடையையும் சிறிய கண்களையும் உடைய பெரிய பிடியினத்துக்குக் கொடுத்து, அவற்றின் மிக்க பசியைத் தவிர்க்கும் வளைந்த கொம்பையுடைய களிற்றைக்காண்பர், கண்டு, மேற்செல்லாது மீள்வர்.

பொத்து - பொந்து, உட்டுளை, வெளிற்றுத்தன்மை. அத்தம் - காட்டுவழி. கடன் - கடம், காடு. சென்ற ஆறாகிய கடன், என்றிசைக்க.கடன்-கடமை. 'கடன் கடன்' என்றே அடுக்குத்தொடராகக் கொள்ளலும் ஒன்று. இடந்தோறும்- இல்வாழ்வானுல் ஓம்பப்படுபவராகிய பிரமசரிய வானப்பிரஸ்த சந்நியாஸ நிலையினரும், களைகண் இல்லாதவரும், வறிஞரும், தென்புலத்தார் தெய்வம், விருந்து ஒக்கலும், தொலைவாகியிரப்போரும், இல்லென்றிரப்போரும், இடனின்றி இரப்போருமாகிய இத்தொடக்கத்தினர் யாவர் மாட்டும். பொருட்பிணி - பொருளாற் பிணிப்புண்ட உள்ளத்தெழும் பொருளீட்டும் ஆசை.

# அப்பர்

## அப்பரும் அறுபத்திஞன்கு கலைகளும்.

## 13. பூமிப் பரிட்சை.

[768-வது பக்கத்தொடர்ச்சி]

இதுகாறும் அப்பர் நவரத்தின இலக்கணங்களைக் கண்டறிந்தவரென அநுமானிக்கத்தக்க அவர் தேவாரப் பாசுரங்கள் சில கண்டோம். இனி நவரத்தினங்களைக் கொழித்தோடும் * நீரோட்டத்தால் நிலவளம் பெருகும் நமது தேச நிலங்களை வேளாள குலத்திலகரான அப்பர் கண்ட தட்சணமே மதிப்பிடும் தன்மை சற்று அவர் திருவாக்கால் ஆராய்வோம்:—

விட்டு வெள்ளம் விரிந்தெழு காவிரி
யிட்ட நீட வயலே விளைவயில்
கொட்ட மாமுழ வோங்கும் குரக்குக்கா
இட்டா மாயிருப் பார்க்கிட ரில்லையே

திருக்குரக்குக்கா - திருக்குறுந்தொகை 5.

வயலைப் பார்த்தவுடனே, † இதுதான் விளையத்தக்க வயல்; ஏனைய வயல்கள் இதுபோலாகா என்று அபிப்பிராயப் படத்தக்க அனுபவமே பூமிப் பரிட்சையென்னும் கலைநுணுக்கமாம். பயன் படாததும், எவ்வளவு உழவு, வித்து, எரு, முதலியன இட்டும் நீர் இறைத்தும் யாதொருபயனும் தாராததுமான பூமியும் உள. அவை பாழ்நிலங்களென இகழப்படும். அப்பர் அதை நடலைவாழ்க்கை நிலைக்கு உவமானப்படுத்துவதைக் காண்க:—

உயிர்நிலை யுடம்பே காலா யுள்ளமே தாழி யாகத்
துயரமே யேற்ற மாகத் துன்பக்கோ லதனைப் பற்றிப்
பயிர்தனைச் சுழிய விட்டுப் பாழ்க்குநீ ரிறைத்து மிக்க
அயர்வினு லைவர்க் காற்றே னாரூர்மூ லட்ட னூரே.

திருவாரூர் - திருநேரிசை 7.

### 1. நிலங்களின் வகை.

i. பாழ் நிலம்:—நிலங்கள் "பயிர்நில மெனவும்" பாழ் * எனவும் இரு வகையன. "பாழ்" என்பது பாலைநிலத்தில் ஒருவகை; எதற்கும் பயன்படாது தொன்றுதொட்டுக் களர் உவர் முதலிய துற்குணங்கள் வாய்ந்தது. மற்றொரு வகை நல்ல பயிர் நிலமாயிருந்து பிறகு அதன்சத்துயாவும் மரித்துப்பயன்படா நிலமாவது. இவ்வாறு நல்ல நிலங்கள் பாழாவதற்குப் பல அறிகுறிகள் உள. "பல்லி"† என்னும் பூஞ் செடிகள் தானே உற்பத்தியாதல்; இரத்தினக்கற்கள் உற்பத்தி—இரத்தினங்கள் விலையுயர்ந்தனவாயினும், உணவுப் பொருள் விளைவுக்கு அவை பகையேயாம். எவ்வளவு சத்திட்டாலும் வயிரம் முதலிய மணிகள் கழனியிற் பொருந்துமாயின், அந்நிலப் பயிர்எவ்விதத்திலும் ஓங்காது; அது பாழ்நிலமாய் எவ்வளவு சிரமமெடுப்பினும் பயன் ஒன்றும் தாராது, ஏனெனில் மண்ணின் பற்று மணிகளாற் * கெடும். இதை ஒருவாறு மனத்தில் எண்ணியோ திருநாவுக்கரசும்

பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து
பாழுக்கே நீரி றைத்தேன்;
உற்றலால் கயவர் தேறு
ரென்னுங்கட் டுரையோ டொத்தேன்!
எற்றுளே னென்செய் கேனு
னிடும்பையால் ஞான மேதுங்
கற்றிலேன் களைகண் காணேன்
கடவூர்வீ ரட்ட னூரே!

திருக்கடவூர் - திருநேரிசை 8.

என்றும், இதன் எதிர்மறையாய்

மெய்ம்மையா முழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்

---

*(i)புலங்களை வளம்படப் போக்கறப் பெருகிப்
பொன்களே சுமந்தெங்கும் பூசல்செய் தார்ப்ப
இலங்குமா முத்தினோ டினமணி யிடறி
யிருகரைப் பெருமரம் பீழ்ந்துகொண் டெற்றிக்
கலங்குமா காவிரித் திருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனே னாயேன்
விலங்குமா றறிகிலே னெம்பெரு மானை
மேலைநோ யிம்மையே வீடுவித் தானை.

சுந்தரர்.

(ii)காலன்வலி தொலைத்தகழல் காலர் போலும்,
காமனெழி லழல்விழுங்கக் கண்டார் போலும்
ஆலதனி லறநால்வர்க் களித்தார் போலும்
ஆணொடுபெண் ணலியல்ல ராஞர் போலும்
நீலவுரு வயிரநிறை பச்சை செம்பொன்
நெடும்பளிங்கென் றறிவரிய நிறத்தர் போலும்
கோலமணி கொழித்திழியும் பொன்னி நன்னீர்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னூரே.

திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் - திருத்தாண்டகம் 5.

† வாரேறு வனமுலையாள் பாக மாக
மழுவாள் கையேந்தி மயானத் தாடிச்
சீரேறு தண்வயல்சூ ழோத வேலித்,
திருவாஞ் சியத்தார் திருநள் ளாற்றூர்
காரேறு கண்டத்தார் காமற் காய்ந்த,
கண்விளங்கு நெற்றியார் கடனஞ் சுண்டார்
போரேறு தாமேறிப் பூதஞ் சூழப்,
புலியூர்சிற் றம்பலமே புக்கார் தாமே.

கோயில் புக்க திருத்தாண்டகம் 4.

* "நத்தப்பாழ்" (deserted village) என்னும் சொற்றொடர் உலகவழக்கத்திற் காண்க.

† "கொல்லைக்குப் பல்லி குடிக்குச் சகுனி" என்னும் பழமொழியில் பல்லி யென்பது கௌளி என்றும் கூறுவர். அது நேரன்று. பல்லி நல்லதும் மொழியும் கெட்டதும் மொழியுமாதலால், பயிர் பாழாவதற்கே முன்னறிவிக்கையாய் முளைக்கும் பல்லியென்னும் வெண்ணிற மலர்களுடைய செடியே என்று எனக்கு ஒருபயிர்த்தொழிலாளி மொழிந்து, அச்செடியையும் காட்டினர்.

*நவரத்தினங்களில் பச்சை, முத்து, பவளம், நீலம் என்னும் நால்வகைக் கற்கள் பழனத்தில் தோன்று வாகையால் ஏனைய பஞ்ச ரத்தினங்களே பயிருக்குப் பகையான மணிகளாம். நமது தேகத்திலும் சிவகதி விளையாது தடுக்க பஞ்சவரான இந்திரியங்களள வன்றோ? அப்பரும் அவற்றை குறிப்பது காண்க:—

பழியுடை யாக்கை தன்னிற் பாழுக்கே நீரி றைத்து
வழியிடை வாழ மாட்டேன் மாயமும் தெளிய கில்லே
அழிவுடைத் தாய வாழ்க்கை யைவரா லலைக்கப் பட்டுக்
கழியிடைத் தோணி போன்றேன் கடவூர்வீ ரட்ட னூரே.

திருக்கடவூர் - திருநேரிசை - 6.



பொய்மையாங் களையை வாங்கிப்
பொறைபெரு நீரைப் பாய்ச்சித்
தம்மையு நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையு ணிற்ப ராகிற்
சிவகதி விளையு மன்றே.

தனித் திருநேரிசை 2.

எனக் கூறுவதும் காண்க. பாழ்நிலத்தில் உழவு செய்தல் மெய்யுழவாகாது. பயன் தரத்தக்க நிலத்தில் உழவு செய்தலே மெய்யுழவாம். நிலவளம் கொடுக்கும் திவ்ய நதிகளின் மணல் வெள்ளத்தால் மூடப்படுவதாலும் நிலம் பாழாகும். நிதானமான நீரோட்டத்தால் சுத்தமான சலம் பாய்வதுடன் எக்கர் காணப்படாது. வெள்ளத்தாலுண்டன * எக்கரைக் கண்ட அப்பருக்குப் "பரப்பு நீர்வரு காவிரித் தென்கரைத் திருப்பராய்த்துறை" யில் இயற்கைநிலை விநோதக்காட்சி விளங்குவது காண்க:—

எட்ட விட்ட விடுமணல் எக்கர்மேல்
பட்ட நுண்டுளி பாயும்ப ராய்த்துறைச்
சிட்டன் சேவடி சென்றடை கிற்றிரேல்
விட்டு நம்வினை யுள்ளன வீடுமே.

திருப்பராய்த்துறை - திருக்குறுந்தொகை 8.

நல்ல நிலமாயிருந்தது மணல் மூடப்பட்டதால் பயிர் விளைவதற்குத் தகாத நிலமாகும் எக்கர் போன்றவர் சமணரென்பார் சம்பந்தர்:—

எக்க ரா(ம் அ)மண் கைய ருக்கெளி
யேன லேன்றிரு வாலவாய்ச்
சொக்க னென்னுளி ருக்க வேதுளங்
கும்முடித் தென்னன் முன்னிவை
தக்க சீர்ப்புக லிக்கு மன்றமிழ்
நாதன் ஞானசம் பந்தன்வாய்
ஒக்க வேயுரை செய்த பத்துமு
ரைப்ப வர்க்கிட ரில்லையே!

திருவாலவாய் - பண் - கொல்லி 11.

ii கொல்லை:—இதைப் புன்செய் என்பர். வீட்டின் முற்றமுமாம். இதில் வாழை முதலிய பழவர்க்கங்களும், முல்லை முதலிய பூக்களும் விளைந்து சிவபூசைக்குப் பயன்படும் மரங்களும் அடர்ந்தால் இந்நிலமே தோட்டமாம். தொண்டர்கள் முன்றிலின் தோட்டத்தொழிலில் மிகும்போது பக்தி விடாரென்பர்மேலோர்.

பொழிலார்தரு குலைவாழைக
ளெழிலார்திகழ் போழ்தில்
தொழிலான்மிகு தொண்டரவர்
தொழுதாடிய முன்றில்
குழலார்தரு மலர்மென்முலை
மடவார்மிகு குன்றில்
எழிலார்தரு மிறைவர்க்கிட
மிடும்பாவன மிதுவே.

சம்பந்தர்.

இத்தகைய கொல்லைவளம் பெற்ற தொண்டர் வசிக்கும் ஊரானது வள்ளன்மை மிக்கதாய் விளங்கா நிற்கும்.

முல்லைமு றுவலுமை யொரு பங்குடை முக்கணனே
பல்லயர் வெண்டலையிற் பலி கொண்டுழல் பாசுபதா
கொல்லைவ ளம்புறவிற் றிருக் கோளிலி யெம் பெருமான்
அல்லல்களைந் தடியேற் கவையட்டித்த ரப்பணியே.
கொல்லைவ ளம்புறவிற் றிருக் கோளிலி மேயவனை
நல்லவர் தாம்பரவுந் திரு நாவல வூரனவன்
நெல்லிடவாள்க(ள்)வேணடி நினைந் தேத்தியபத்தும்வல்லார்
அல்லல்க ளைந்துலகி னண்டர் வானுல காள்பவரே.

சுந்தரர்—திருக்கோளிலி-பண்-நட்டராகம் 5

கொல்லை நிலத்தில் * ஆடுமாடுகள் தங்குவதற்கும், மேய்வதற்கும் வசதிகள் பல உள. இதைப் பெரும்பாலும் ஆயர் வசிக்கும் திணையான முல்லை நிலத்தின் பகுதியாய்க் கொள்வர். ஆயினும் பழனத்தைச் சார்ந்த கொல்லைகளே அதில் விளைந்த நெற்கதிர்களில் உள்ள மணிகளை அடிப்பதற்குப் "போர்க்கள" மாயும்† பணை கட்டும் தலமாயும் விளங்குவனவாம். இங்குள்ள கழனியில்‡ கொன்றையும்$ நறவமும் தெங்கும் மிகவும் குளிர்ச்சிதரும். அத்தகைய திருவாரூரில் அப்பர் கண்ட தோற்றங்களில் ஒன்றும்:—

(i) பூங்கழல் தொழுதும் பரவியும்
புண்ணியர் புனிதாவுன் பொற்கழ
லீங்கிருக்கப் பெற்றே னென்ன
குறை யுடையேன்?
ஓங்குதேங் கிலையார் கமுகிள
வாழை மாவோடு மாதுளம்பல
தீங்கனி சிதறுந்
திருவாரு ரம்மானே!

(ii) திரியுமூவெயில் தீயெழச் சிலைவாங்கி
நின்றவனே யென் சிந்தையுட்
பிரியுமா றெங்ஙனே பிழைத்தேயும்
போக வொட்டேன்

---

• கொண்டலுள்ளார் கொண்டீச் சரத்திலுள்ளார்
கோவலூர் வீரட்டங் கோயில் கொண்டார்
தண்டலையார் தலையாலங் காட்டி லுள்ளார்
தலைச்சங்கைப் பெருங்கோயில் தங்கி னார்தாம்
வண்டலொடு மணற்கொணரும் பொன்னி நன்னீர்
வலஞ்சுழியார் வைகலின்மேன் மாடத் துள்ளார்
வெண்டலைமான் கைக்கொண்ட விகிர்த வேடர்
வீழி மிழலை யேமேவி னாரே.

திருவீழிமிழலைத் திருத்தாண்டகம் 9.

* கொக்கிறகு சென்னி யுடையான் கண்டால்
கொல்லை விடையேறும் கூத்தன் கண்டாய்
அக்கரைமே லாட லுடையான் கண்டாய்
யனலங்கை யேந்திய வாதி கண்டாய்
அக்கோ டரவ மணிந்தான் கண்டாய்
அடியார்கட் கமுத மானன் கண்டாய்
மற்றிருந்த கங்கைச் சடையான் கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் றானே.

திருமழப்பாடி - திருத்தாண்டகம் 2.

† துணையாக முயங்கிப்போய்த் துறைசேரு மடநாராய்!
பணையார வாரத்தான் பாட்டோவாப் பழனத்தான்
கணையார விருவிசும்பிற் கடியரணம் பொடிசெய்த
வினையாரமார்பனென் னெழினலமுண் டிகழ்வானோ?

திருப்பழனம் - பண் - பழந்தக்கராகம் 7.

‡சுடலைசேர் சுண்ண மெய்யர் சுரும்புண விரிந்தகொன்றைப்
படலைசே ரலங்கன் மார்பர் பழனஞ்சேர் கழனித் தெங்கின்
மடலைநீர் கழிய வோடி மதனிடை மணிகள் சிந்துங்
கெடிலவீ ரட்ட மேய கிளர்சடை முடியி னாரே.

திருவதிகை வீரட்டானம் - திருநேரிசை.

$ உறவனாய் நிறைந் துள்ளம் குளிர்ப்பவன்
இறைவ னாகிநின் றெண்ணிறைந் தானவன்
நறவனா றும்பொழிற் றிருநள் ளாறன்
மறவனாய்ப் பன்றி பின்சென்ற மாயமே.

திருநள்ளாறு-திருக்குறுந்தொகை 5

பெரிய செங்நெற் பிரம்புரிசேந்த
சாலி திப்பிய மென்றிவைபகத்
தரியுந் தண்கழனி
யணியாரூ ரம்மானே (7)

திருவாரூர் - பண் - சீகாமரம்.

இத்தன்மையான இயற்கைக் காட்சிகள்¶ ஞான நிலையில் நின்றோர் மனதிற் கடவுட் சோதியின் கிரணங்களை ஆங்காங்கு வெளிபிடு மன்றோ?

மருத நிலத்தைச் சார்ந்த கொல்லை சிறுபான்மை* பொழில்களாகத் தமிழகத்திற் றிகழும். அவற்றின் அழகை வாகீசர் திருக்கருவிலித் திருக்குறுந்தொகையில் " கோலவார் பொழில்" என்றும், "கொங்குவார் பொழில்" என்றும் "கோடுநீள் பொழில்" என்றும், "கொய்கொள் பூம்பொழில்" என்றும் பலவாறு விளக்குவது காண்க. வேளாண்மை மிக்க நமது நாட்டில் வழிப்போக்கர் தங்குவதற்கு இப்பொழில்கள் பயன்படுவதுமன்றிக் காட்டு மார்க்கம் கடந்துவருவோர் வெகு தூரத்திலேயே † கண்டு நமக்காதரவு இவ்விடத்துளதென ஆநந்திக்கும் அறிகுறியாயுமிருந்தனவாம்.

வம்பின்னடி யீர்நாண்மல ரிட்டுத்தொழு துய்ய
உம்மன்பினொ டெம்மன்புசெய் தீசன்னுறை கோயில்
மும்மென்றிசை முரல்வண்டுகள் கெண்டித்திசை யெங்கும்
விம்மும் பொழில் சூழ்தண்வயல் வீழிம்மிழ லையே

மசங்கற்சமண் மண்டைக்கையர்
குண்டக்குண மிலிகள்
இசங்கும் பிறப் பறுத்தானிட
மிருந்தேண்களித் திரைத்தும்
பசும்பொற்கிளி களிமஞ்ஞைக
ளொளிகொண்டெழு பகலோன்
விசும்பைப்பொலி விக்கும் பொழில்
வீழிம்மிழ லையே.

சம்பந்தர்.

iii வயல்:—இதை நஞ்செய் நிலமென்பர்- * செந்நெல் வெண்ணெல் விளையுந் தலமாம். இதுவே அரசனுக்குப் பொருள் விளைவிக்கும் ஆதரவாம்.

முன்னமே நினையா தொழிந் தேனுனை
யின்ன நாளுன சேவடி யேத்திலேன்
செந்நே லார்வயல் சூழ்திருக் கோளிலி
மன்ன னேயடி யேனை மறவலே.

திருக்கோளிலி - திருக்குறுந்தொகை 1.

இவ்வயலின் செம்மையால், நெய்தல்† ஆம்பல் முதலிய நீர்நிலைச் செடிகளும் பூண்டுகளும் தழைக்கும்.

நெய்த லாம்பல் நிறைவயல் சூழ்தரு
மெய்யி னார்வலங் கொண்மறைக் காடரோ!
தையல் பாகங்கொண் டீர்கவர் புன்சடைப்
பைதல் வெண்பிறைப் பாம்புடன் வைப்பதே.

திருமறைக்காடு - திருநேரிசை 5.

இவ்வாறு மெலிந்த தன்மையையுடைய நீர்நிலைத் தாவரங்கள் நேர்வது வயலின் நிரந்தரக் ‡ குளிர்ச்சியாம். அதனால் செவ்விய வயல்களிற் றாமரை பூப்பதும் நமது நாட்டிற் சாதாரண காட்சியாகும்:—

இயலு மாலொடு நான்முகன் செய்தல
முயலிற் காண்பரி தாய்நின்ற மூர்த்திதான்
அயலே லாமன்ன மேயுமந் தாமரை
வயலெ லாங்கயல் பாய்வன்னி யூரரே!

திருவன்னியூர் - திருக்குறுந்தொகை 8.

வயல்களில் சதா நீர்நிலைக் காணப்படுவதால், பலவகை மச்சங்களும் அதனிடையே விளையாடும்:—

நரிவரால் கவ்வச் சென்று நற்றசை யிழந்த தோற்றந்
தெரிவரால் மால சிந்தை தீர்ப்பதோர் சிந்தை செய்வார்
வரிவரா லுகளுந் தெண்ணீர்க் கழனிசூழ் பழன வேலி
யரிவரால் வயல்கள் சூழ்ந்த வதிகைவீ ரட்ட னரே.

திருவதிகை வீரட்டானம் - திருக்குறுந்தொகை - 1.

அருவ னாயத்தி யீருரி போர்த்துமை
யுருவ னாயொற்றி யூர்பதி யாகிலும்
பருவ ரால்வயல் சூழ்ந்த பழனத்தான்
திருவி னாற்றிரு வேண்டுமித் தேவர்க்கே ?

திருப்பழனம் - திருக்குறுந்தொகை - 1.

கடம்பட நடமாடினாய் களைகண்
ணெனக்கொரு காதல் செய்

---

¶காலையெழுந்து கடிமலர் தூய தாங் கொணர்ந்து
மேலை யமரர் விரும்புமிடம்: விரையான் மலிந்த
சோலை மணங்கமழ் சோற்றுத் துறையுறை வார்சடைமேல்
மாலை மதியமன்றோ வெம்பிரானுக் கழகியதே ?

திருச்சோற்றுத்துறை - திருவிருத்தம் 7.

* தந்தை தாயொடு தார மெனுந்தளைப்
பந்த மாங்கறுத் துப்பயில் வெய்திய
கொந்த விழ்பொழிற் கொண்டீச் சுரவனைச்
சிந்தை செய்மி னவனடி சேரவே!

திருக்கொண்டீச்சுரம் - திருக்குறுந்தொகை 4

நிலையி னார்வரை நின்றெடுத் தான்றனை
மலையி னாலடர்த் துவிறல் வாட்டினான்
குலையி னார்பொழிற் கொண்டீச் சுரவனை
புலையி னால்வணங் கத்தவ மாகுமே.

ஷை—10.

† தொண்டுபடு தொண்டர் துயர் தீர்ப்பான் றான்காண்
மேலர்ச்சே வடியிணையெஞ் சோதி யான்காண்
உண்டுபடு விடங்கண்டத் தொடுக்கி னான்காண்
ஒலிகடலி லமுதமரர்க் குதவி னான்காண்
வண்டுபடு மலர்க்கொன்றை மாலை யான்காண்
வாண்மதியாய் நாண்மீனு மாயி னான்காண்
எண்டிசையு மெழிலாரும் பொழிலார் கச்சி
யேகம்பன் காணவனென் சிந்தை யானே.

திருக்கச்சியேகம்பம் - திருத்தாண்டகம் 8

* என்ன மாதவஞ் செய்தனை நெஞ்சமே!
மின்னு வார்சடை வேதவி ழுப்பொருள்
சேந்நே லார்வயல் சேறையுட் செந்நெறி
மன்னு சோதிநம் பால்வந்து வைகவே!

திருச்சேறை - திறக்குறுந்தொகை 2.

† சுனையு ணீலஞ் சுளியு நெடுங்கணா
ளிளைய னென்றென்று மேசுவ தென்கொலோ?
நினையுந் தண்வயல் சூழ்திரு நின்றியூர்
பனையி னீருரி போர்த்த பரமரே.

திருநின்றியூர் - திருக்குறுந்தொகை 5.

‡ ஆறுடைச் சடையர் போலும்
அன்பருக் கன்பர் போலும்
கூறுடை மெய்யர் போலும்
கோளர வரையர் போலும்
நீறுடை யழகர் போலும்
நெய்தலே கமழு நீர்மைச்
சேறுடைக் கமல வேலித்
திருச்செம்பொன் பள்ளி யாரே.

திருச்செம்பொன்பள்ளி - திருநேரிசை 5.



தடியொடுங்கி வந்தடைந்தே
னெழிப்பாய் பிழைப்ப வெல்லாம்
முடங்கிறான் முதுநீர் மலங்கிள
வாளை சேங்கயல் சேல்வரால்களி
றடைந்த தண்கழனி
பணி யாரூ ரம்மானே!

திருவாரூர் - பண் - சீகாமரம் 2.

இம்மச்சங்களைத் தின்பதற்குப் பலவகைப் பறவைகள் வந்து சேரும். அவை கொக்கு, நாரை, அன்னம் முதலியன. அதை அப்பர் ஆங்காங்குத் தான் சென்ற சிவஸ்தலங்களில் காணப்பட்ட வயல்களை வர்ணிக்குமிடத்துக் கூறுவர்:—

செக்க ரஞ்செழு செஞ்சுடர்ச் சோதியார்
அக்க ரையரெம் மாதி புராணனார்
கோக்கி னம்வயல் சேருங் குரக்குக்கா
நக்க னைத்தொழ நம்வினை நாசமே.

திருக்குரக்குக்கா—திருக்குறுந்தொகை 7.

முன்னை நான்செய்த பாவ முதலறப்
பின்னை நான்பெரி தும்மருள் பெற்றதும்
அன்ன மார்வயற் கோழம்பத் துள்ளமர்
பின்னல் வார்சடை யானைப் பிதற்றியே.

திருக்கோழம்பம்—திருக்குறுந் தொகை 7.

படையார் மழுவொன்று பற்றிய
கையன் பதி வினவில்
கடையார் கொடிநெடு மாடங்க
ளோங்கு கழு மலமா
மடைவாய்க் குருகினம் பாளை
விரி தொறும் வண்டினங்கள்
பெடைவாய் மதுவுண்டு பேரா
திருக்கும் பெரும் பதியே.

திருக்கழுமலம்—திருவிருத்தம்.

---

* கைத்தலை மான்மறி யேந்திய கையன் மழுவன்
பொய்த்தலை யேந்திநற் பூதியணிந்து பலிதிருவான்
செய்த்தலை வாளைகள் பாய்ந்து களுந்திரு வேதிகுடி
யத்தனை யாரா வமுதினை நாமடைந் தாடுதுமே !

திருவேதிகுடி - திருவிருத்தம் 2.

# பிரஜைகளின் கடமை

## (From Plato's dialogues)

\89125

[792 - வது பக்கத் தொடர்ச்சி]

**சாக்ரிடீஸ்:**—தவறானதைத் தவறெனத் தெரிந்த பிறகு நாம் ஒருபொழுதும் செய்தல் கூடாது என்று கூறுவதா; அல்லது ஒரு சமயம் செய்யலாம் என்றும், மற்ற சமயங்களில் செய்யக்கூடாது என்றும் சொல்வதா? கெடுதியையும் நேர்மைக்கு விரோதமானதையும், நான் சற்றுமுன் சொன்னபடியும், நம்மால் முன்னரே ஏற்றுக்கொள்ளப்பட்டபடியும் எப்பொழுதும், எச்சமயத்திலும் செய்யக்கூடாதென்பதா? நாம் எல்லோரும் ஆய்ந்து கண்டு ஏற்றுக்கொண்ட வொரு முடிவை நாம் இப்பொழுது போக்கிலே போக விட்டுவிடுவதா? நாம் குழந்தைகளினும் எவ்விதத்திலும் சிறந்தவர்கள் அல்லர் என்பதை நாமே கண்டுகொள்ளவோ, இந்நாள்வரை ஆர்வமுடன் பேசுவதும் ஆராய்வதும் முடிவொன்று காண்பதுமாய் நம் வாழ்நாளைச் செலவிட்டோம்! பெரும்பாலோர் நினைப்பது எதுவாகட்டும், நமக்கு நேரலாகும் நிலை நன்மை நல்குவதாகட்டும், அல்லது தீமையையே தருவதாகட்டும், 'நியாய விரோதமான செயல், அச்செயலைச் செய்பவனுக்கு அவமானத்தையும் தீமையையுமே எப்பொழுதும் விளைவிப்பதாகும்' என்று நாம் முன் கண்டதான வாய்மையைக் கொள்வதா அல்லது அதையே இப்பொழுது மறுப்பதா, சொல்.

**கிரிட்டோ:**—கண்ட வோர் வாய்மையை ஏற்கவே வேண்டும்.

**சாக்:**—அங்ஙனமாயின் எந்நிலையிலும் தவறானதைச் செய்யவே கூடாதன்றோ ?

**கிரிட்டோ:**—ஆம், செய்யவே கூடாது.

**சாக்:**—நமக்குத் தீமை புரிந்தார்மாட்டும், நாம் தீமை புரியலாகாது. ஏனெனின், நாம் எவருக்கும் தீமையொன்று புரிதல் தர்மமன்று.

**கிரிட்:**—உண்மையே, ஐய.

**சாக்:**—எனதருமை நண்பனே, கிரிட்டோ, மறுபடியும் கேட்கின்றேன்—நாம் தீயதொன்றைச் செய்தல் கூடுமா?

**கிரிட்:**—பெரியோய், கூடவே கூடாது.

**சாக்:**—தீமைசெய்தலே அதிகமான தொகையினர் கருமமாயிருக்க (morality of the many) நாம் தீமைக்குத் தீமைசெய்தல் என்ற கொள்கையைப் பற்றி என்ன நினைக்கின்றாய். அது நியாயத்தின்பாற் பட்டதாகுமா, அல்லது ஆகாதா? விடை இயம்புவாய்.

**கிரிட்:**—தீயதைச் செய்தல் நியாயமாகாது.

**சாக்:**—தீயதை யொருவனுக்குச் செய்தல் அவனுக்குத் துன்பத்தைத் தருவதாகும்.

**கிரிட்:**—உண்மையே.

**சாக்:**—அப்படியாயின் நமக்கொருவன் இழைத்த தீங்கு எதுவாகட்டும், பழிக்குப்பழி யென்று அவனுக்கு மறுதீங் கிழைத்தல் ஆகாது அன்றோ. நண்பா, நீ சொல்கின்றபடி நான் செய்யவேண்டுமென்று கூறுகின்றனையே; உண்மையிலேயே நான் அப்படிச் செய்யவேண்டுமென்று நீ தான் நினைக்கின்றாயா, என்பதைக் கருதுமாறு உன்னை நான் கேட்டுக்கொள்கின்றேன். தீமைக்குத்தீமை யிழைத்தலெனும் கொள்கை இதுவரை யெவரும் கண்டவொரு முடிவன்று, இனி யென்றும் உண்மை அறிவுடை எப் பெருந்தொகையினராலும் காணக்கூடியது மன்று. இதை 'ஓம்' என்று ஏற்பவர்க்கும், அன்றென்று மறுப்பவர்க்கும் ஒன்று சேரும் இடமெதுவு மில்லை. இவர்கள், ஒருவரை யொருவர், தங்களது நெடிதகன்ற அபிப்பிராய பேதத்தை நோக்குங்கால், தூற்றத்தான் செய்யலாம். எனவே—நண்பா சொல்வாய்; 'ஒருவருக்குத் தீமையைச் செய்வதாகட்டும், அல்லது செய்தவொரு தீங்

கிற்குப் பதிலெனத் தீங்கிழைப்பதாகட்டும், அல்லது இழைக்கலான ஒரு தீங்கினின்று தன்னைக் காத்துக் கொள்வதற்காகட்டும், தீயதைச்செய்வது அறமுடைச் செயலன்று' என்ற எனது இந்தக் கொள்கையை நீ ஒவ்வி ஏற்கின்றாயா, இல்லையா? நாம் மறுபடியும் ஆய்ந்து பார்ப்பதற்கு இதை எடுத்துக் கொள்வோமா? அல்லது இக்கொள்கையை இப்பொழுது ஏற்க மறுக்கின்றாயா ? இது எனது பழைய கொள்கை, இப்பொழுதும் நான் அங்ஙனமேகருதுகின்றேன். வேறுபட்ட அபிப்பிராயம் கொண்டிருப்பாயானால், நீசொல்வதைக் கேட்க விரும்புவேன். நான் கொண்ட கொள்கையின்படியே உன் எண்ணமும் இருக்குமாயின் ஐய, நாம் அடுத்தபடி சென்று பார்க்கலாம்.

கிரிட்:—ஐய, நீ அடுத்தபடி செல்லலாம். எனது எண்ணம் மாறவில்லை.

சாக்:—அவ்வண்ணமாயின் நண்பா, நான் அடுத்தபடி மகிழ்ச்சியுடன் செல்வேன். இப்படிச் செல்லத் துவக்குகையில், நான் கேள்வியொன்று கேட்கின்றேன். 'நேர்மையானது இது' என்று ஒருவன் தான் ஏற்றுக்கொள்வதைக் கடவாது காரியம் செய்ய வேண்டுமா; அல்லது நேர்மையெனக் கொண்டதொன்றை வஞ்சித்து வேறுவகை வினைகள் புரிவதா, விடையளிப்பாய் ?

கிரிட்:—தான் 'நேர்மை இது' என்று கண்டபடியே ஒருவன் செய்து தீரவேண்டும்.

சாக்:—ஐய, இதுவே வாய்மையாயின், நடைமுறையில்அது செல்லுமாறு எவ்வாறு? ஏதன்ஸ்நகர ஜனங்கள் இஷ்டத்திற்கெதிராய் நான் சிறையினின்று வெளியேறுவதால், யாருக்காவது நான் தீமை இழைக்கின்றேனா என்பது கேள்வி. இதனையே வேறோர் விதமாய்க் கூறலாம். அப்படிச் செய்வதால் ஒரு சிறிதும் யாருக்குத் தவறு இழைக்கூடாதோ அவர்கள்மாட்டுத் தவறு இழைத்தவனாகின்றேன் அல்லேனோ? இதனால் நெறிமுறையானதென நம்மால் ஒருமுகமாய் ஏற்கப்பட்ட சிறந்த கொள்கையை நான் போக்கிலே போகவிட்டவனாகேனோ? நண்ப, நீ என்ன சொல்கின்றாய் ?

கிரிட்:—இதுபற்றி எனக்கொன்றுந் தெரியாது. ஆகையினால் ஐய, நான் ஒன்றும் கூறமுடியாதவனாய் இருக்கின்றேன்.

சாக்:—அப்படியாயின், நான் கூறும் பொருளை இனிநீ சிந்திப்பாய். அரசாங்கச் சட்டதிட்டங்களை மதியாது பள்ளிப்பிள்ளையெனப் பயிலப்போவதாக வைத்துக்கொள். அரசாங்கமும் சட்டதிட்டங்களும் என்னிடம் வந்து கேட்கின்றன:—

"ஐய, சாக்ரிடீஸே, என்ன செய்ய நினைத்துளாய். சட்டங்கள் சக்தியற்றுப்போக, ஒரு தனி மனிதனால் சட்டப்படிக்கான முடிவு காற்றிலே விடப்படுமானால், ஒரு அரசாங்கம் நிலைத்திருக்க முடியுமென்று நீ நினைக்கின்றாயோ?".

இவ்வாறான வார்த்தைகளுக்கு, கிரிட்டோ, நமது பதில் என்னவாயிருக்கவேண்டும். நாவன்மையில் சிறந்தவொருவன், ஒரு தண்டனையை முடித்து வைக்கவிருக்கும் சட்டத்தைச் செயலற்றதாகச் செய்துவிடுவதன் தீமையைப்பற்றி வார்த்தைகள் பற்பல எடுத்தியம்ப இயலும். ஆனால், "நீ சொல்வதெல்லாம் சரி; எனினும், அரசாங்கம் எங்களுக்குத் தீங்கிழைத்திருக்கின்றது; நியாயமற்ற தண்டனையை விதித்துளது" என்று நாம் கூறலாம். நானும் அவ்வண்ணமே கூறுகின்றேன் என்று வைத்துக்கொள்.

கிரிட்:—நல்லது, வைத்துக்கொள்வோம்.

சாக்:—சட்டம் சொல்லும்:— 'இதுதானா நீயும் நானும்செய்துகொண்டஒப்பந்தம். அரசாங்கம்விதித்த தண்டனைக்கு உட்படல் அன்றோ உன் கடன்' சட்டங்கள் கூறுகின்ற இம்மொழிக்கு ஆச்சரியப்படுவேனாயின், அவை ஒருக்கால் இன்னுஞ் சில இவ்வாறு சொல்லலாம்:

"ஐய நீ, வந்தவரெவரையும் கேள்விகள் கேட்பதும், அவர் கேட்பதற்கு விடையளிப்பதுமாய பழக்கம் கொண்டிருக்கின்றனை. அரசாங்கத்தையும் எங்களையும் அழித்துவிட நீ முயன்றனையென்று தீர்மானித்த எங்கள் மீது எத்தவறு கண்டனை, கூறுவாய். முதன்முதலாக உலகத்தில் உன்னை உதிக்கச்செய்தது நாங்கள் (சட்டங்கள்) அல்லவா? உனது தந்தையார், உன தன்னையை மணந்துகொண்டதும் பின்னர் அவர் உன்னைப் பெற்றெடுத்ததும் எங்களது துணையால் அன்றோ? கலியாணச் சடங்குபற்றி விதித்தும் காத்தும் வரும்எங்கள் முறையில் உனக்கு ஏதாவது குறைகள் இருக்கின்றனவா; சொல்வாய்."

இதற்கு விடையாக நான், 'குறையெதுவு மில்லை' என்று சொல்லவேண்டுமன்றோ. அவை மீண்டும் கேட்கின்றன:—

"பிறந்த குழந்தைகள் வளர்க்கப்படும் வகையில், கல்வி கற்பிக்கும் வகையில், நாங்கள் கையாண்டுவரும் முறைகளில் நீ ஏற்பதற்கியலாக் குறைகள் எவையேனும் உண்டா? நீயும் இத்தகைய வகைமுறைகளிற்றான் கல்விபயின்று வளர்ந்துள்ளாய். பிரஜைகளைப் பற்றிய இத்தகைய பொறுப்புள்ள எங்களுக்கு, உன்னைச் சங்கீதத்திலும் உடல்பயிற்சியிலும் பழக்குவிக்குமாறு உன் தகப்பனாரைப் பணிக்கும் உரிமை எங்களுக்கு இலதோ?"

இன்னதற்கு, 'இவ்வுரிமை உங்களுக்கு உண்டு' என்றுதானன்றோ நான் பதில்கூறவேண்டும். அவை, மேலும் சொல்கின்றன:

"நல்லது, அப்படியாயின், உன்னை இவ்வுலகில் உதிக்கவைத்து வளர்த்துக் கல்விதந்து வளரச்செய்த எங்களது குழந்தையும் அடிமையும் நீ அல்லனோ? உனது தகப்பனும் முன்னோர்களும் அப்படித்தான் இருந்தனர். இது உண்மையானால் எங்களுக்கும் உனக்கும் அந்தஸ்தில் வேற்றுமை உண்டு. நாங்கள் உனக்குச் செய்வதை எங்களுக்குத் திருப்பிச் செய்யும் உரிமையை நீ பெறவில்லை. உனது தகப்பனையும் உனது எஜமானனையும் தீங்கிற் குட்படுத்திக் கோபித்துக்கொள்ளவோ, அல்லது தண்டிக்கவோ உனக்கு உரிமை இருக்கின்றதென்று நீ நினைக்க முடியுமோ? உனது தகப்பனும், உனது எஜமானனும், உன்னைக் கோபித்துக்கொண்டனர், தண்டித்தனர், அல்லது உன்பால் தவறு இழைத்தனர் என்றால், நீயும் அவர்களுக்குத் தீங்கு இழைப்பாயோ? இழைக்கலாம் என்று சொல்லமாட்டாய். உன்னை அழித்துவிட எங்களுக்கு உரிமை இருக்கின்ற காரணத்தால், எங்களையும் இத்தேசத்தையும் உன்னால் இயன்றவளவு நிலைகுலையச் செய்யலாமென்பது உன் கருத்தா? உண்மையான தர்மத்தைக் கையாள்கின்ற சாக்ரிடீஸே, நீ



இவ்வண்ணம் சட்டவிரோதமாகச் செய்தல் தர்மமாமோ, சொல். அறிஞர்களாலும், கடவுளர்களாலும் மதிக்கப்படும் தேசத்தை, தாயினும் தந்தையினும் குல முன்னோரினும் மிகமதித்து நாம் போற்றவேண்டுமென்பதை உன்போன்ற தத்துவ உணர்வினன் அறியக்கூடாத தொன்றோ. கோவந்தான் தேசங் கொள்ளுமாயின் தகப்பனினும் மரியாதையாக, நயமொழிகூறி, வந்தித்துக் கோபத்தைத் தணியுமாறுசெய்தல் வேண்டும். தேசம் சிறையையோ சவுக்கடியையோ தண்டனையாகக் கொடுத்தால், பொறுமையுடன் ஏற்கவேண்டுவதன்றோ முறை. தம் நாட்டின்பொருட்டு யுத்தகளத்திற்குச் சென்றவர் சாவையும் புண்களையும் கண்டு பின் வாங்கலாமா? அல்லது எதிரியினிடம் பணியலாமா? போர்க்களமாகட்டும், நியாயஸ்தலம் ஆகட்டும், எந்தவிடமாகட்டும், தேசமும், சட்டமும் செய்யச் சொல்வதைச் செய்தே தீரவேண்டும். அவைகள் செய்யச் சொல்வது நியாயமிலதாயின், நியாயம் இதுவென்று காட்டி அபிப்பிராயத்தை நேர்வழி திருப்பலாம். தாய்க்கும் தகப்பனுக்கும் தீங்கிழைக்கலாகாதெனின், தேசத்திற்குத் தீங்கிழைத்தல் கூடாதென்பது இன்னும் வலியுறுவதாகின்றது."

நண்பனே கிரிட்டோ, இதற்கு நாம் என்னபதில் சொல்வது, இயம்புவாய். சட்டங்கள் உண்மைகளைப் பேசுகின்றனவா, அல்லது உண்மைக்கு விரோதமா? சொல் பார்ப்போம்.

கிரிட்:—அவைகள் சொல்லியவை உண்மையென்றே நினைக்கின்றேன்.

(தொடரும்)

# தமிழ்ப் பாடம் 142.

[ 790-வது பக்கத் தொடர்ச்சி ]

## நைடதம்—நளன் தூதுப் படலம்

இவ்வண்ணம் இமையவரை மணக்குமாறு தூதுரைத்த நளனது மொழிகளைக் கேட்ட தமயந்தி நாணமெய்தி வருத்தமொடு எருத்தங்கோட்டிநிற்க அவள் தோழியர் எதிர்மொழி விளம்பலுற்றார்:—

ஆற்றல்சா னளனே யன்றி
யாருயிர் பிறிதின் றென்னும்
வேற்றடங் கண்ணி னுடன்
மெய்பதைத் தாவி சோரச்
சாற்றிய மாற்றந் தன்னாற்
றழலுமிழ் தறுகட் பேழ்வாய்க்
கூற்றுவன் றூத னென்று
கூறிய தியற்கை யாமே. 66

உரை:-ஆற்றல் சால் - பராக்கிரமம் மிகுந்த, நளனே அன்றி -நளனையேதவிர, ஆர் உயிர்-தனக்குப் பொருந்திய உயிர், பிறிது - வேறே, இன்று என்னும் - இல்லை என்று எண்ணியிருக்கும், வேல் - வேல் போன்ற, தட - பெரிய, கண்ணினாள்தன் - கண்களையுடைய தமயந்தியின், மெய் பதைத்து -உடல் பதைத்து, ஆவி சோர - உயிர் சோரும்படி, சாற்றிய - நீ சொன்ன, மாற்றம் தன்னால் - வார்த்தையினால்—தழல் உமிழ் - நெருப்பை உமிழ்கின்ற, தறுகண் - அஞ்சாமையையும், பேழ்வாய் - பெரிய வாயையும் உடைய, கூற்றுவன் - யமனுடைய, தூதன் என்று - தூதனாகவந்திருக்கின்றாய் என்று, கூறியது - உன்னைச் சொல்லிக்கொண்டது, இயற்கை ஆகும் - தகுதியே ஆய் விட்டது.

விரிவுரை:—நயமிகவுடைய சொற்கள் நவிலக் கற்றவர் தமயந்தியொடு அவள் தோழிமார்கள். 'இரக்கமின்றி இவ்வுரை நீ இயம்பலாமோ. என ஏசுவாராகி, "தமயந்தியின் மெய்பதைத்து ஆவிசோரும்படி உரைக்கின்ற நீ,யமதூதன் என்றுவந்தது எல்லாப்படியாலுந் தகுதியாயிற்று" என்கிறார். இதுவடமொழியில் சமாலங்காரம் என அழைக்கலாகும் தகுதி அணியின்பாற்படும். (3—671). முன், 'அநங்கனென்று உரைப்பதற் கையமில்லையே' என்றும், "கோதைமார் முகம் மாமதி என்பதும் மன்னன் செய்யகண் தாமரை என்பதுந் தக்க வாயவே" என்றும் வந்திருப்பனவும் இவ்வணியே. தான், 'இந்திரன் அக்கினி வருணன் யமன்' ஆய தேவர்களுக்குத் தூதுவனாக வந்திருக்கின்றானென்று நளன் கூறியதில் 'யமதூதன்' என்ற தொடர் சேரஇயல்வதாவது இதற்கு ஆதாரமாயிற்று.

---

வையக மொருகோ லோச்சி
வான்புகழ் நிடதங் காக்கு
மையனை மணப்ப தன்றி
யரிமதர் நெடுங்கட் செவ்வாய்த்
தையல்வே றொருவர் நாமஞ்
சாற்றினு மாற்றா ளாகி
வெய்யசெந் தழலின் மூழ்கி
விளிவதற் கைய மின்றே. 67

உரை:— வையகம் - பூமி முழுவதும், ஒரு கோல் ஓச்சி - ஒரே செங்கோல் செலுத்தி, வான் - சிறந்த, புகழ் - புகழ்பெற்ற, நிடதம் - நிடத தேயத்தை, காக்கும் - காக்கின்ற, ஐயனை - நளவேந்தனை, மணப்பது அன்றி - மணப்பாளே அல்லாமல், அரி - செவ்வரி படர்ந்த, மதர் - மதர்த்த, நெடும்கண் - நீண்ட கண்களையும், செவ் வாய் - சிவந்த வாயையும் உடைய, தையல் - தமயந்தியானவள், வேறு ஒருவர் - (தனக்குக் கணவனாவதற் குரியவனென்று) வேறொருவனுடைய, நாமம் - பெயரை, சாற்றினும் - சொன்னாலும், ஆற்றாள் ஆகி -பொறுக்கமாட்டாதவள் ஆகி, வெய்ய- கொடிய, செம் தழலில் - சிவந்த நெருப்பில், மூழ்கி - விழுந்து, விளிவதற்கு - சாவதற்கு, ஐயம் இன்று - சந்தேகம் இல்லை. (என்று தோழியர் கூறினர்).

குறிப்பு:— நிடதம் + காக்கும் = நிடதங்காக்கும்:— இது இரண்டாம்வேற்றுமைத் தொகையாகையால், நிலை மொழி யீற்று மகரமெய் வருமொழி முதல் வல்லினமெய்க்கு இனமாய்த்திரிந்தது( ).நாமம் + சாற்றினும் = நாமஞ் சாற்றினும், என்று ஆனதும் அவ்வாறே.

---

என்றவர் மொழிய வேந்த
 னியம்புவா னெரியின் வீழ்ந்து
பொன்றில்வெங் கனலி தன்னைப்
 புணர்ந்ததாம் புகன்ற செந்தீ
யன்றிவார் புனலின் வீழ்ந்துள்
 ளாருயிர் விடுத்தா ளேனுந்
துன்றுசீர் வருணன் றன்னைத்
 தோய்ந்ததாய் விளையு மன்றே. 68

உரை:—என்று - என்று, அவர் - அத்தோழியர், மொழிய - சொல்ல, வேந்தன் - நளவேந்தன், இயம்புவான் - பின்வருமாறு கூறுவான். "எரியின் - நெருப்பில், வீழ்ந்து - விழுந்து, பொன்றில் - அத்தமயந்தி இறப்பாளாகுல், வெம் - வெப்பமுடைய, கனலி தன்னை - அக்கினிபகவானை, புணர்ந்தது ஆம் - அவள் கூடியது ஆகும். புகன்ற - நீங்கள் சொல்லிய, செம் தீ அன்றி - சிவந்த நெருப்பில் விழாமல், வார் - நீண்ட, புனலின் வீழ்ந்து - நீரில் விழுந்து, உள் ஆர் - அவளுக்குப் பொருந்தியுள்ள, உயிர் - உயிரை, விடுத்தாள் ஏனும் - விட்டாலும், துன்று - மிகுந்த, சீர் - சிறப்பையுடைய, வருணன் தன்னை - வருணபகவானை, தோய்ந்ததாய் - கலந்ததாய், விளையும் - முடியும், அன்றே - அன்றோ!

விரிவுரை:—தமயந்தியைத் தான் இழப்பதில்லை என்பது நிச்சயமானபின் நினைத்தபடி பேசி விளையாடத் தலைப்படுகின்றான் நளன். உங்கள் தலைவி தீயில் விழுந்தாலென், கடலில் விழுந்தாலென்? அக்கினியும் வருணனும் வேண்டுவது அதுதானே. பழம் நழுவி அவர்களுக்குப் பாலில் விழுந்தது போலாம் அது. இனி இதனைச் செய்ய அவள் இசைவாளாயின் செய்யட்டும்" என அவன் அசதியாடினான்.

அன்றியுங் கனலி சான்றா
 யல்லது வதுவை யாற்றற்
கொன்றுமோ வருண னெவ்வா
 றுதகமோ டளிக்குந் தூய
மன்றலெவ் வாறு முற்றும்
 வானவ ரருளில் லாமற்
றுன்றுநீர்ப் புவியி லார்க்குஞ்
 சூழ்வினை முடிக்க லாமே. 69

உரை:—அன்றியும் - அதுவன்றியும், கனலி சான்றாய் அல்லது - அக்கினி சாக்ஷியாயல்லாமல், வதுவை ஆற்றற்கு ஒன்றுமோ - விவாகம் செய்வதற்கு முடியுமோ. வருணன் - வருணபகவான், ஒவ்வாது - மனம் இசையாமற் போனால், உதகமோடு அளிக்கும் - நீர்த் தாரைவார்த்துக் கொடுக்கும், தூய மன்றல் - தூய்மையான விவாகம், எவ்வாறு முற்றும் - எப்படி முடியும். (ஆகையால்) வானவர் - தேவர்களுடைய, அருள் இல்லாமல் - அருள் இல்லாமல், துன்று - அடர்ந்த, நீர் - நீரை உடைய கடலால் சூழப்பட்ட, புவியில் - பூமியில், யார்க்கும் - எப்படிப்பட்டவர்க்கும், சூழ்வினை - நினைத்த காரியத்தை, முடிக்கல் ஆமே - முடிக்கக்கூடுமோ (என்றான் நளன்).

விரிவுரை:— தேவர்களைப் பகைத்துக்கொண்டு வேறொருவனைத் தமயந்தி மணப்பதென்பது இயலாது என விளையாட்டாய்க் காட்டுகின்றான் நளன். சாக்ஷிக்கு அக்கினி வரமாட்டான்; கன்னிகாதானத்திற்கு வருணன் வந்து உதவமாட்டான். எனின் வதுவை முடிவது எங்ஙனம் எனத் தான் தூதாக வந்த கருமத்தை வற்புறுத்துவான்போல்கின்றனன்.

வேயினைப் பழித்த மென்றோள்
 வேற்றடங் கண்ணி னுடை
னேயபே ரழகு மாந்த
 ரிருகணு னோக்க வற்றோ
தீயுமிழ் வைர வொள்வா
 ளேந்திய தேவர் கோமா
னாயிரங் கண்க ளானு
 நோக்குதற் கமைந்த தன்றே. 70

உரை:—வேயினை - மூங்கிலை, பழித்த - நிந்தித்த, மெல்தோள் - மெல்லிய தோள்களையும், வேல் - வேல் போன்றதும், தட - பெரியதும் ஆன, கண்ணினுள் தன் - கண்களையும் உடைய தமயந்தியின், ஏய - பொருந்திய, பேர்அழகு - பெரிய அழகானது, மாந்தர் - மனிதர்களின், இரு கண்ணால் - இரண்டு கண்களால், நோக்க அற்றோ - பார்க்கத் தகுந்ததோ! (மற்று) தீ உமிழ் - நெருப்பைக் கக்குகின்ற, வைர ஒள்வாள் - ஒளி பொருந்திய வஜ்ராயுதத்தை, ஏந்திய - ஏந்தியிருக்கின்ற, தேவர் கோமான் - தேவர்களுக்குத் தலைவனை இந்திரன், ஆயிரம் கண்களாலும் - தன் ஆயிரங்கண்களாலும், நோக்குதற்கு - பார்ப்பதற்குத் தகுந்ததாய், அமைந்தது - அமைந்திருப்பதாகும் (என்றான் நளன்).

விரிவுரை:—"தமயந்தி, இரண்டு கண்களே உடைய இம்மண்ணுலக மக்களில் எவரை மணந்தாலும், முழுதும் பார்க்கப்படாமல் அவளழகு வீணாகும்; ஆயிரம் நயனங்களுடைய இந்திரன் ஒருவனை மணந்தாற்றான் தன் அழகின் முழுப்பயனையும் அவள் தன் கணவனுக்கு அளித்தவளாவாள்; ஆதலால் அத்தேவர் கோமானை மணப்பதே தக்க அறிவாகும்" எனக் கூறினான் என்பது இச்செய்யுளின் கருத்து.

வெந்திறற் களிநல் யானை
 விதர்ப்பர்கோ னளித்த மாதைத்
தந்துயி ரளித்தி யென்னத்
 தனியிரு விசும்பு காக்கு
மிந்திரன் கேட்ட போதி
 லெண்ணிய வனைத்து நல்கு
மைந்தரு வழங்கி னும்மா
 லன்றென மறுக்க லாமோ. 71

உரை:—'வெம் - கொடிய, திறல் - பராக்கிரமத்தையும், களி - மதத்தையும் உடைய, நல் - நல்ல, யானை - யானைகளையுடைய, விதர்ப்பர்கோன் - விதர்ப்பர்களுக்கு அரசனான வீமராஜன், அளித்த - பெற்ற, மாதை - பெண்ணாகிய தமயந்தியை, தந்து - கொடுத்து, உயிர் - தன்னுடைய உயிரை, அளித்தி - காப்பாற்று', என்ன - என்று, தனி - ஒப்பற்ற, இரு - விசாலமான, விசும்பு - ஆகாயத்தை, காக்கும் - காக்கின்ற, இந்திரன் - இந்திரன், கேட்டபோதில் - கேட்பானேயானால், எண்ணிய அனைத்தும் - எண்ணியவைகளையெல்லாம், நல்கும் - கொடுக்கும், ஐந்தரு - பஞ்ச தருக்கள், வழங்கின் - தமயந்தியை இந்திரனுக்குக் கொடுத்துவிட்டால், நும்மால் - உங்களால், அன்று என - அது வேண்டாமென்று, மறுக்கல் ஆமோ - மறுக்கக்கூடுமோ! (என்று நளன் கூறி முடித்தான்).



விரிவுரை:—"மாதர்காள், உங்கள் தோழி தமயந்தி இந்திரனை மணக்கப்படாதென்று மறுப்பதெல்லாம் அந்தத்தில் வீணாகலாம். இந்திரனோ ஐந்தரு வேந்தன். அத்தருக்களோ எண்ணிய அனைத்தும் நல்குந்தன்மையன. இந்திரன்தன் காதலுக்கு இத்தமயந்தி இரங்காளாகின், அவன் அத்தருக்களிடம் சென்று, "கற்பகமே, எனக்குத் தமயந்தியைத் தா" என்று கேட்டுவிடலாம். கற்பகமோ கொடுத்து விடும். பின் நீங்கள் என் செய்வீர். ஆகையால் எப்படியும் இந்திரன் தமயந்தியை எய்திவிடக் கூடியதாயிருக்க, இப்படி வலிந்து கொள்ளும்வன்மைம் நிகழாமல் தமயந்தி தானே மனமிசைந்தவள்போல் நடப்பதே நன்மையாகும்" என்று காட்டினான்.

## கம்பராமாயணம்

### அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[792-வது பக்கத் தொடர்ச்சி]

சட்டத்தால் சாதிப்பரோ வொன்று.

"ஒருமகன்" பரதனே யாதல் வேண்டுவது அவசியமில்லை யெனில் பின், "அடுத்த தம்பிக்கும் ஆம்" என்று வந்துள சொற்கள் ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியாருக்குப் பெரிதும் அலக்கண் விளைத்து நிற்கின்றன. இராமனுக்கு எய்திய அரசசெல்வத்தின் வைபவங்களை, குழல் பிரியா இழையெனச்சார்ந்துள இலக்குவனேயன்றி மற்றைய தம்பியர் அநுபவிக்கும் வழியில்லை என்ற பொருள் இதற் கேற்காதென்று விலக்கிவிட்டுக் கைகேயியின் தம்பியாம் உதாஜித்தையேகுறித்துக் கூனி பேசுகின்றாள் எனப் பாரதியார் பகர்கின்றார். செய்யுள் வாக்கியங்களினமைப்பு இதற்கு இடந்தரவில்லையே. "அவன் குலக்கோமைந்தர்தமக்கும்" என்றபின் 'அடுத்த தம்பியும்', 'அவன் அடுத்த தம்பியும்' என்றே பொருள்படல்வேண்டும். அவன் குலக்கோமைந்தர்தமக்கும் 'உன்' அடுத்த தம்பிக்கும் எனச் சொல்லால் மாற்றினாலன்றி எச்சமாய் விட்டுணர்த்தல் இயலாது. அதுவுமன்றி உதாஜித்து, கைகேசிக்குத் தம்பியோ தமையனோ, யாரறிவார். அது எவ்வாறாயினும், சட்டத்தின்படி அரசு கைகேசியின் அடுத்த தம்பிக்கே ஆகவேண்டுமென ஸ்ரீமான் பாரதியார் பின்வருமாறு வாதிக்கின்றனர்:-

"இச் சுலோகக்கருத்தை ஊன்றி விசாரிக்குமுன் நாம் தெளிந்துகொள்ளவேண்டிய தொன்றுண்டு: 'கன்யா சுல்கம்' என்ற சொற்றொடரும் அதன்பொருளும் கவனிக்க வேண்டும். மனுவாதி வழக்கற நூற்பழக்கமுடைய வாதம் வல்லுநர்பலரும் இவ் வறத் தொடர்புடைய சொற்றொடராக்கமும் பயனும் நன்கறிவர். வழக்கிடை வழுக்கியுமிழுக்கப்படாத் தமிழர் இச்சொற்பொருள் கேட்டிருக்கக் காரணமில்லை. கன்னி யொருத்தியை மணக்குங் காதலன், மணமகள் தன்னகம் விழைந்து வருமாறு விரும்பித்தரும் பொருளே 'சுல்க' மெனப்படுவது. 'சீதனம்' எனும்பொதுப் பெயர்கொண்ட பெண்டிர் நிதிவகுப்பிலொன்றே 'சுல்க' மாகும். யாடக அயாடக சீதனம், சௌடயீகசீதனம், சுல்க சீதனம் எனச் சீதனம் பலதிறப்படும். பெண்டிர்க்குப் பெற்றோர், அவர் சுற்றத்தார், வேட்போர், அவரொக்கல், நட்பாளர் பலரும் மணங்கருதித் தருங் கொடைப்பொருளும், மணவினை கருதாமலே தரப்பெறும் திருவும், தந்தொடர்புடைச் சுற்றத்தார் இறந்தவரிடமிருந்திறங்கப் பெண்டிர் பெறுநிதியும், தம் தாளாண்மை முதலியவற்றாற் றையலார் தாமே யீட்டுந் தேட்டும், இன்னு மெனைத்துவகையானும் அவரடையு மெய்ப்பொருளும், வகைமுறையால் வெவ்வேறு பெயர்பெறினும், தொகைநிலையிற் 'சீதனம்' எனும் பொதுப்பெயர்க் குரியதாகும்; எனினும் 'சீதன' ஸ்திரீதனமெல்லாம், ஒருபடித்தாம் ஆட்சி அனுபவம் வாரிசுக்கிரம வீழ்ச்சி யுரிமைகளை யுடைத்தில்லை. யாடக சௌடயீக சீதனங்கள் இவையுடைய பெண்டிர்தமைக் கொண்டவர் கவர்ச்சிக்குட்படுவன. கொண்டவர் தேவைக்குட்பட்டுப் பெண்டிர்க் கவற்றிற் பராதீனபாத்தியம் வரையறுக்கப்பட்டுளது. உடைய பெண்டிர்காலத்துக்குப்பின் அவற்றை யடைதற்குரியார் வரிசை முறையும் வேறுபடுவதாகும். நமதாராய்ச்சிக்கியைபுடைய 'சுல்கமோ' மகளிர்க்கு மணவாளர் மணக்குங்கால் விரும்பித்தரும் நிதியாம். இதிற் பெண்டிர் எல்லைமிகந்த முற்றுரிமை யுடையராவர். வரம்பிறந்த நிறையாட்சி, கொடையுரிமை எல்லாம் இதிற்பெண்டிர்க்கு உண்டு. உடைய மடவார்க்குப்பின் அவர் மக்கள் அடைதற்கு உரியர். மக்களில்வழி அவர் கணவர் பெற்றோர்க்கின்றி, அவருடன் பிறந்த சோதரரே அவர் 'சுல்க' நிதியடைய முதலுரிமை யுடையவர். இனைய ஆட்சி வீழ்ச்சி உரிமை விசேஷங்களுடைய சீதனமே 'சுல்க'மாகும்.

'தசரதசக்கரவர்த்தி கைகேயியைத் தான் விரும்பிக் கேட்குங்கால், தன் அயோத்தியரசாங்கத்தை அவளுக்குச் 'சுல்க' மாகத் தந்தனன்; என்று வான்மீகியின் மேற்கவிதை தெரிவிக்கின்றது. பண்டைத் தமிழர்போலாது ஆரியருள் ஆடவர் மடந்தையரை மணமாடத்தன்றி முன்காணகில்லாராகவே, மணமகளான கைகேயிக்காக அவள் தந்தையான கேகயமகாராஜனிடம் தசரதன் 'சுல்க'ப்பிரதிஜ்ஞை பண்ணித் தந்ததாக வான்மீகி விசதமாகக் கூறியுள்ளார். ஆகவே ஆரிய தர்ம சாஸ்திரக் கிரமப்படி, அயோத்தியரசு அன்று முதல் கைகேயியின் 'சுல்க' சீதனசொத்தாகி, அவளுக்காக அவள் கணவனால் ஆளப்பட்டதாக வேண்டுவதன்றி, தன்னிலையிற் றசரதனுக்கு அவ்வரசில் எவ்வித சுவாதீனமும் ஏற்படுமாறில்லை. கொடுக்குமுன் அவனுடைமையான அயோத்தியரசு, முற்றுடைமை யாட்சிமுறைக்கதிபனான தசரதனாற் கைகேயிக்கு அவளை அவன் மணக்குங்கால் '·சுல்கதிரவியமாக'ப் பிரதிஜ்ஞையுடன் பாத்தியப்படுத்திக் கொடுக்கப்பட்டுளது. அப்படிக் கொடுபட்டபின், அதிற் றசரதனுக்கு யாதொரு கொடையுரிமையுங் கிடையாது. கைகேயி வயிற்றுதிக்குந் தநயனுக்கும், அவன் மைந்தருக்குமே, அவள் 'சுல்க'நிதியாம் அவ்வரசு வரன்முறை வழக்கால் உரிமையாகும். அவட்குச் சந்ததியற்ற வழி, அயோத்தியரசு அவளுடன் பிறந்த யுதாஜித்து ராஜகுமாரனுக் குரித்தாமல்லால், கைகேயியின் தொடர்பற்ற தசரதகுலத்தாரெவருக்கும் ஆமாறில்லை.

"தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளமெனுந் தகையானைப் பரதனெனும் பெயரானை"க்

கேகயர்கோன் மகள் பயந்தபிறகு பரதனும் அடுத்த கிரம வாரிசான யுதாஜித்தும் உயிருடனிருக்க, அயோத்தியரசுக்குத் தசரதன் உடையவனுமில்லை; அதை யவன் கோசலை மகனான இராகவனுக்குக் கொடுக்கும் பெற்றியு மில்லை.

இச்சட்டத்தின் அமைதியையும் இனிச் சிறிதாராயலாம்.

# தனிப்பாடல்கள்.

## முருகன்

1

ஆறு முகமுண்டு பன்னிரு தோளுண் டருள்பொழியீ
ராறு விழியுண்டு சோதிவை வேலுண் டடியர்வினை
வீறு கெடுக்கு மடியிரண் டுண்டு விரைந்துவர
ஏறு மயிலுண்டு நெஞ்சே பயமுனக் கெங்ஙனுண்டே.

இரும்பு திரித்தன்ன கூர்ங்கோட்டு மேதி யிறைக்குமஞ்சேன்
கரும்பு திரிக்கும் பிணிக்குமஞ் சேன்காலக் கோளுக்கஞ்சேன்
அரும்பு திரிக்கும் முறுவனல் லார்மயற் கஞ்சுகில்லேன்
சுரும்பு திரிகுழல்வள்ளியை வேட்டவன் றொண்டினனே. ௨

என்னுயிர்க் குயிரே யோலம் யாங்கணும் நிறைந்தா யோலம்
பன்னிரு விழியா யோலம் பராபர முதலே யோலம்
தன்னிக ரில்லா யோலம் தண்ணருட் கடலே யோலம்
மின்னொளிர் வேலாயோலம் வீரமா மயிலா யோலம். ௩

இருண்மலக் கடுங்கட் சூர னேவலர் தங்க ளோடு
பொருதெனைக் கொல்வான் சேறும் போகிடம் பிறிது
[காணேன்
உரனுட னெதிர்க்க கில்லே னோடியு முய்ய மாட்டேன்
திருவருள் கொடுத்துக் காப்பாய் சிவசிவ முருகாவோ
[லம்.

தேன்பூத்த மலரிதழித் தொடைய லாடத்
திங்களிளம் பிறையாடச் செக்க ரஞ்சுங்
கான்பூத்த செய்ய சடைக் கற்றை யாடக்
காம ரரவணி யாடக் கரங்க ளாட
மீன்பூத்த விழியுமையாள் களிப்பி னுட
மேதகுபொன் னம்பலத்து விரும்பி யாடும்
மான்பூத்த மலர்க்கரத்த னுதலிற் பூத்த
வள்ளி நாயகன் திருத்தாள் வணக்கஞ்செய்வாம்.

ஆறாறு நீக்கி யறிவுரு வாகிநின்
றூறுப் பிறவி யறவருள் செய்குவா
னூறுன னன்பெய ரோடெழுந் தன்றரு
ளாறுன தந்தவற் கன்பு செய்வாமே. ௪

அட்டகிரி வாழ வமர்ந்துறையு மாறுகச்
செட்டி திருவடிகள் சேவிப்போர்க்—கிட்டமுள
சித்தியொடு புத்திசிவ தத்துவவு ணர்ச்சியருட்
பத்திமிகும் வீடும் பயன். ௫

அகர உகர மகரமொரு மூன்றும்
விரவ வருமுருக நாமம்—ஒருகால்
மெய்யன்பொ டோதுகின்ற மேலவர்கள் வீடடைதல்
கையம்பென் றோதுங் கலை. ௬

பந்தமறுக்கும் பயத்தைக் கெடுக்கும் பகைதணிக்கும்
வந்தகொடிய பிணியினை மாற்றும் பலங்கெடுக்கும்
அந்த நமன்வரி லோட்டும் மெய்ஞ்ஞான மருளுமெய்யே
கந்த வனத்துப் பெருமான் சரண கமலங்களே. ௭

அறுமுகம் முகத்தைக் காக்க அருள்விழி விழியைக் காக்க
மறுவறு தோளீராறும் மலர்க்கர மிரண்டுங் காக்க
உறுபய னளிக்குந் தாள்க ளோரிரு தாள்கள் காக்கத்
தெறுசுடர்ச் சோதி வைவேல் தீவினை விலக்கிக் காக்க.

வாயினை முருகன் காக்க மார்வினைக் கடம்பன் காக்கத்
தாயினு மினிய செவ்வேள் தகுமுடல் முழுதுங்காக்க
தூயவனுளத்தைக் காக்கச் சோதிவேல் தரிக்கப் பெம்மான்
காய்பகை நோய்கோள் நாளின் கயக்கறுத்தினிது காக்க ௮

இனிப்பிறக்க வென்னல் முடியாதென் னையா
கனிக்குலகு சூழ்வந்த கந்தா—வனக்குறத்தி
காதலா யானை கணவர் வொருமொழியை
ஓதலாம் வாவா வுவந்து. ௯

வன்னமர கதவடிவு கொஞ்சிமுத்
தாடிமணி வள்ளத்தி லமுதமூட்ட
வாயார வுண்கின்ற வமையத்து
நினைவுவர மடியினு மெழுந்து துள்ளி
முன்னவன் தோளிலே செஞ்சதங் கைகள்
கொஞ்சு முளரிகள் பொருத்தியாடி-
முடியிலே யடியவர்க ளிட்டவறு
கினையள்ளி முன்கைமா னுக்கருதிப்
பன்னக வடத்திலே மற்றதைக் கட்டிவரு
பகீரதியின் நீர் பருக்கிப்
படர் சடையி னிலவுமம் புலிமாறொ
டேசண்டை பயில்விக்க யானை முகவன்
மன்னன்பிறொடு நகைக்கச் சிணுங்கிக்
கொண்டு வந்து தாய் மடியின் மேவும்
மல்லற்செ ழுங்குழவு தமிழ் முருக
னிருசரண மறவாது தொழுவா மரோ. ௧௦

செய்தவினை விளைவினிலே நிபதிபெனும் படியால்
சேரவளந் தருள்போகத் திறனுகரும் வேலை
எய்தவரும் புதுவினையும் விளைவாக நுகர்ந்தே
இறந்து பிறந்திதுகாறும் வெகுவாக விளைத்தேன்
பொய்தவிரும் படியருளி யாசையினை யறுத்துப்
புதுவினையேறுதவகை போற்றி மலநீக்கித்
துய்ய திருவடிக்கீழே யொன்றுக்கி ஞானச்
சுகமருள்வாய் எனையாண்ட சுப்ரமண்ய குருவே
கரியமல மாசைதனைக் காட்டவதன் வயமாய்க்
கைப்புமினிப்பும் புரிந்து கடவநாட் கழித்தேன்
உரியபய னென்றினையு நுகரகிலேன் வீணே
உடம்பெடுத்துப் போட்டுடைத்த வுறுதொழிலாய்க்
[கொண்டேன்
தெரியல்நறுங் கடம்பணியுஞ் செவ்வேளே யுன்றன்
செய்யமலர்ச் சேவடிக் கீழன்பை யினிநல்கி
விரியுமனக் குரங்கறுத்து புலனெறியை வெட்டி
மேலான வருணெறியில் விட்டிடுவா யெனையே.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
சோல் ஏஜன்ட்ஸ்:-யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்




டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (1-8-0) பிரான்சு:

டிப்போ, பம்பாய்
கல்கத்தா

NANJANGUD TOOTH POWDER

மதுரை
காஞ்சீபுரம்.



# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்போருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரீடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1 கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமோம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50.
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்போருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய் மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

கிருமபோன்

**சங்கீத கீர்த்தனும்ருதம்.**

இதுபோது கிரும்போன் என்னும் விஞ்ஞான கருவியில்பாடிவரும்திருச்செந்தூர் ஷண்முகவடிவு எஸ். வி. சுப்பய்யா பாகவதர், டி. எம். காதர்பாட்சா, எஸ். ஆர். கமலம், பெங்களூர்தாய்,மிஸ்.கெ. ரங்கநாயகி, சேலம்அம்மாகண்ணு, திருவிடமருதூர் பவானி, தனுக்கோட்டியும் சகோதரியும், சுந்தரியும் வரலட்சுமியும், வி.சுப்ரமண்ய பாகவதர், பபூன் ஷண்முகம், A. S. ராசப்பா, கனகரத்தினமும் மாணிக்கமும், சேலம்கோதாவரி, லோகாம்பாள், பார்வதி அம்மாள், வி. சாரதாம்பாள், சிவக்கொழுந்து, வனஜாட்சி, வேதம்மாள், வீணை தனம் குமாரத்திகள், பிரம்மஸ்ரீ என். எஸ். துரைசாமி அய்யர், நியமம் நடராஜ பாகவதர், எ. சாமி நாயுடு,வைத்தியநாத பாகவதர், மற்றுமுள்ள ஸ்திரீ திலகங்களும் அரங்க மேடையில் குயிலோசையோ காந்தர்வ ஈாரதர் கிம்புருடர் தொனியோ என்று சந்தேகிக்கும் வண்ணம் தென்னுடெங்கும் அமிர்த மழை பொழிந்துவரும் மாஸ்டர் எஸ்-ஜி கிட்டப்பா, கே-பி சுந்தராம்பாள் முதலிய நடிக ரத்தினங்களுடைய முக்கனி ரசத்தையொத்த (670-பக்கங்களுக்கு மேற்பட்ட) கீர்த்தனை, விருத்தம், கட்டளைக் கலித்துறை முதலிய அரும்பெறும் பாடல்களை ஒருங்கே யழைத்து ராக தாளங்களுடன் பிளேட் நெம்பருடன் அழகியகிளேஸ்தாளில் அச்சிட்டுக்கண்ணைக்கவரத்தக்கபயிண்டுசெய்து எங்களிடம் சொற்ப விலைக்குத் தயாராக யிருக்கிறது.

தனி பாகம் ரூ. 1-0-0. மூன்றுபாகம் கட்டடம் ரூ. 2-8-0.

ஷண்முகானந்த புத்தக சாலை,
நயினியப்பநாயகன் தெரு, பி. டி. மதராஸ்.

**:: திருக்குறள் ::**

மூலமும், சொற்குறிப்பு அகராதியும், விஷய ஒப்புக் குறளும்; வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு.

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300-பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப்படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதன் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

வி. பி. செலவு வேறு. விலை அணு 12.

கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசை, சென்னை.

Estd. **NATIONAL** 1906
**INSURANCE COMPANY LIMITED.**
*Head Office*:-**9, Old Court House St., Calcutta.**

Insured for how much ?
Is it sufficient ?
Will it hurt you to make little sacrifices to pay your Life Insurance premium ?
Can we satisfy you ?

For Literature
Apply to :—
**T. ANANTACHARI**, B.A.,
Branch Secretary.
NATIONAL INSURANCE COMPANY LTD.,
Madras Branch, Loane Square,
Broadway, Madras.

# கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி

**பிரசுரங்கள்.**

## சங்க நூல்

சென்னைப்பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்
திருவாளர் - கா. ரா. கோவிந்தராஜ முதலியார்
எழுதியது.

தமிழின் அரும்பெரும் செல்வமாய் வாய்த்திருக்கும் சங்ககால இலக்கியங்களைக் கற்பவர்க்கு இணையிலாப் பேருதவி யளிக்கவல்ல இந்நூல் எவ்வெவர் மாட்டும் இருக்கவேண்டியது இன்றியமையாதது. முச் சங்கங்களின் வரலாறும், அவ்வச் சங்கங்களில் பாடப்பெற்ற நூல்களின் தன்மையும், இவையனைய பிறவும் இந்நூலின்கண் விளக்கிஇருக்கக் காணலாம். இத்தகைய அறிவினை யளிப்பதுடன் ஓதுதற்கும் நனி இனிது இந்நூல். தமிழ்ப்பற்றுடையவ ரனைவர் கையிலும் இந்நூலொன்று இல்லாமல் தீராது. சங்க நூல்களைப் படிக்க ஆரம்பிப்பதற்குமுன், இந்நூலைக் கற்றிருப்பாராயின், அச் சங்கநூல்களின் உண்மைப் பொருளையும், அழகையும், பயனையும் உணர்வது எளியதாகும். விலை ரூபா 1—4—0.

## கந்தபுராண வசனம்

வித்வான்
என். வி. முத்துகிருஷ்ண ரெட்டியாரவர்கள்
எழுதியது.

முருகப் பெருமானது திருவவதாரச் சிறப்பினை யுரைக்கும் கச்சியப்பசிவாசாரியார்தம் பெருங்காப்பியமாகிய கந்தபுராணச் செய்யுள்களைத் தழுவித் தெளிவும் இனிமையும் வாய்ந்த செந்தமிழ் வசனநடையில் எழுதப்பெற்றுள இந்நூல், முதனூலின் பெருமையிற் சிறிதுங் குறையாமல், தமிழழகு பூத்துச் சைவசித்தாந்த நறுமணம் வீசிப் பத்தித்தேன் சொட்டி ஞானங் கனிந்த வொரு கற்பகத் தருவிற்கு நிகராகு மென்பதிலையமில்லை. ஆறுமுகமுடைய அருட்பெறும் குமரவேளின் திப்பிய சரித்திரத்தைச் செய்யுள்வாயிலாக ஓதியுணர்ந்து அவர் கருணைக்கு ஆளாகவல்லார் சிலரேயாக, எத்தகையிரைரும் எளிதில் படித்துத் தெரிந்து கொள்ளுமாறு வசனநடையில் வரைந்துள இந்நூல் தமிழரனைவர்க்கும் அருமருந்துபோல் அமைந்திருக்கின்றது. (கிளேஸ் பேபர்) விலை ரூபா 2—8—0.

**கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி**

திருவல்லிக்கேணி, :: :: சென்னை.



# வர்த்தமானம்

சென்றவாரம் சனிக்கிழமைமுதல் நீலகிரியில் பெருமழையும் காற்றும் நிகழ்கின்றன வென்றும் சிற்சில சமயங்களில் பனிக் கட்டிகள் மழையுடன் விழுகின்றன வென்றும், காற்றும் மழையும் இன்னும் வலிவுறுமாயின் என் செய்வதென்ற அச்சம் ஏற்பட்டுள்ளதென்றும் குன்னூர்ச் செய்தி கூறுகின்றது

***

சிதம்பரம் அண்ணாமலைச் சர்வகலாசாலையில் மைசூர் வாசியான ஸ்ரீமான் எஸ். ஸ்ரீ கண்டையா விஜயநகர ராஜ்ய ஸ்தாபனம் என்னும் விஷயமாய் 4 தினங்கள் தொடர்ந்து பிரசங்கம் செய்தார் என்றும், அவர் உரை, போதகர்களாலும் மாணவர்களாலும் கொண்டாடப்பெற்றதென்றும் சிதம்பரச் செய்தி யொன்று கூறுகின்றது.

***

பஞ்சாப்பிற்கு அருகாமையிலுள்ள அமிர்தசரசில் பழைய மார்க்கெட்டிற்கு எதிரில் ஒரு வெடிவிபத்து ஏற்பட்டதென்றும், இதனால் இந்துக்கள் இருவர் காயமடைந்தனர்என்றும்,கடைக்காரர்கள் அனைவரும் பயந்து கொண்டிருக்கின்றனர் என்றும், போலீசார் விசாரணை செய்து வருகின்றனர் என்றும் பஞ்சாப் செய்தி கூறுகின்றது.

***

சென்றவாரம் ராஜப்பிரதிநிதியவர்கள் அவசரச் சட்டம் ஒன்றை பிரயோகத்தார். அச்சட்டம் சட்ட விரோதமான ஸ்தாபனங்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதாகும். இச்சட்டம் அக்டோபர் 12-ந் தேதியிலிருந்து பம்பாய் மாகாணத்தில் அமலுக்குக் கொண்டுவர பம்பாய்க் கவர்னர் உத்தரவு கொடுத்து விட்டார். என்று பம்பாய்ச்செய்தி கூறுகின்றது.

***

லாகூர் சதிவழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் என்று சென்ற ஆறுமாத காலமாக விசாரணை செய்யப்பட்டவர் இப்பொழுது தண்டிக்கப்பட்டனர். ஒருவருக்கு மரணதண்டனையும் வேறுசிலருக்குத் தீபாந்திரசிக்ஷையும், கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டன. இதை யொட்டிக் கல்கத்தா நகரவாசிகள் கடைகளை மூடிவிட்டனர் என்று கல்கத்தாச் செய்தி கூறுகின்றது.

***

மலேயா நாட்டில் வயிறு பிழைக்கும் பொருட்டுச் சென்ற இந்தியக் கூலிகளின் நிலைமை மிகவும் இழிவடைந்து வருகின்றது. பெய்ரியா, சாண்டியா, ரஸுலா என்ற மூன்று கப்பல்களில் 6000 இந்தியர்கள் திரும்பவேண்டி நேர்ந்தது. இந்த 6000 பேர்களில் 5000 பேர் திருப்பி அனுப்பப்பட்ட இந்தியக் கூலிகளாவார். இன்னும் 2500 கூலிகள் திருப்பி அனுப்பப்படுவர் என்று தெரிகின்றது. ரப்பர் விலை இறங்கினபடியினால் இந்த நிலைமை வந்துளதெனச் சொல்லப்படுகின்றது என்று மலேயாச்செய்தி கூறுகின்றது.

***

ஸர். டி. விஜயராகவாச்சாரியார், இராக் ஸிரியா துருக்கி பாலஸ்தீனம் முதலிய விடங்களைப் பார்வையிட்டு, இப்பொழுது லண்டன் வந்துள்ளார். இவர் விவசாய விஷயங்களைப்பற்றியும், சிறப்பாய்ப் பருத்தி சாகுபடியைப் பற்றியும், வெட்டுக் கிளிகளால் பருத்திக்கு நேரும் அழிவைத் தடுக்கும் ஆராய்ச்சிபற்றியும் கவனித்து வருகின்றார்.ரோமில் அடுத்த மாதம் நடைபெற விருக்கும் விவசாய மஹாநாட்டிற்குச் செல்லும் பிரிட்டிஷ் பிரதிநிதிகளுடனும், இந்தியப் பிரதிநிதிகளுடனும் பேசிவிட்டுப் பிறகு ரோமிற்குப் பிரயாணமாவார். பிறகு அங்கு கூடவிருக்கும் ஸர்வதேச விவசாய மஹாநாட்டில் இந்தியப்பிரதிநிதிகளின் தலைவராக விருப்பார். இச் சர்வதேச மஹாநாடு முடிவுற்றதும், இவர் பாலஸ்தீனம் சென்று பின் எகிப்து சென்று அங்கு விவசாய விஷயங்களைக் கவனிப்பார். எகிப்து நாட்டில் வேலை முடிந்ததும் இந்தியாவிற்குத் திரும்புவார்.

***

லண்டனில் கூடியுள்ள ஏகாதிபத்திய மஹா நாட்டிற்கு வந்திருக்கும் வர்த்தக சங்கத்தின் பிரதிநிதிகள் ஸர். ஜான். சைமனுக்கு ஒரு விருந்தளித்தனர். அச்சமயம் ஸர் ஜான் சைமன் பேசியதன் சுருக்கம் வருமாறு:—இந்திய அரசியல் விஷயத்தில் குடியேற்ற நாட்டினர் மிகுந்த கவனம் செலுத்திவருகின்றனர் என்று தெரிகின்றது. எல்லாக் குடியேற்ற நாட்டு ஜனத்தொகையைக் காட்டிலும் 13 மடங்கு அதிகமாயுள்ள ஜனத்தொகையைக் கொண்டது இந்தியா. எனவே இந்திய அரசியல் நிலைமையை எல்லோரும் நன்கு உணர்ந்து, பின் நிலைமைக்கேற்றபடி புத்திசாலித் தனமாய் விஷயங்களைத் தீர்மானிக்கவேண்டும். இந்தியா இங்கிலாந்துடன் சம்பந்தம் உள்ள நாடாகவே இருக்க வேண்டும். இந்தியாவில் அரசியல் அபிவிர்த்தி ஏற்பட நாம் அனுதாபத்துடனும் சாமர்த்தியத்துடனும் முயலவேண்டுவது அவசியமெனினும், இந்தியாவும் இங்கிலாந்தும் பிரியும்படி ஒன்றும் நிகழலாகாது. நல்ல எண்ணமுள்ள எல்லோரும் இந்திய முன்னேற்றத்தைக் கோரினவர்களே. ஆனால் நிலைமையை நன்குணர்ந்து, அந்நிலைமைக்கு ஏற்றவாறு அரசியல் அபிவிர்த்திக்கானது செய்ய வேண்டும்.

***

பம்பாய்த் தலைவர்களில் ஒருவரான ஸ்ரீமான் நரிமென் இனிக் காங்கிரஸ் செய்யவேண்டிய நிர்மாண வேலையைப் பற்றி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—முதன்முதலாகக் காங்கிரஸ்காரர்கள் மத்தியஸ்தகோர்ட்டுகளை ஸ்தாபித்து இக்கோர்ட்டில் ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்படுமாறு செய்யவேண்டும். ஜட்ஜ் வேலையிலிருந்தவர்களும், வக்கீல்மார்களும், நகரவாசிகளும் இக்கோர்ட்டு விஷயத்தில் கலந்து கொண்டு வேண்டுவன செய்ய முன்வரவேண்டும். குறித்த வொருவிடத்தில் குறித்த வேளையில் மத்தியஸ்த்த சபையைக் கூட்டி, முதன்முதலாக வியாபாரிகளுக்குள் ஏற்படும் வழக்குகளை விசாரித்து முடிவு செய்யவேண்டும். சிறையில் தன்னோடு இருந்த தனது நண்பர்களான ஸ்ரீமான் முன்ஷியும் மற்றவர்களும் இந்த ஏற்பாட்டை ஆதரிக்கின்றனர். இந்த மத்தியஸ்த கோர்ட்டு ஸ்தாபனம் விஷயமாய் நண்பர் பலருடன் கலந்து திட்டம் ஒன்று நான் ஏற்படுத்தி வருகின்றேன். சீக்கிரத்தில் திட்டம் வெளியாகும் கோர்ட்டுகளையும் சீக்கிரத்தில் ஸ்தாபித்து விடவே முயன்று வருகின்றோம். இத்துடனும் தன் வேலைமுடியவில்லை. இந்தியா துவக்கிய பகிஷ்கார இயக்கம் பூர்ணமாவதற்கு வேறு சிலவேலைகளும் செய்யவேண்டி யிருக்கின்றன. தொழிலாளர்களை ஒன்று சேர்த்துக் கட்டுப்பாடாக அவர்கள் இருக்குமாறு செய்வதும் ஒருமுக்கிய வேலையாகும். முதன்முதலாக மத்தியஸ்த சபைகளை நிறுவவேண்டும். சிவில் வழக்குகளை முதன்முதல் எடுத்துக் கொள்ளலாம். ஜனங்களுக்கு இதில் நம்பிக்கை வந்தவுடன் சிறு கிரிமினல் வழக்குகளையும் எடுத்துக் கொள்ளலாம். விடாமுயற்சியுடனும் ஊக்கம் குன்றாமல் மாத்திரம் வேலை செய்ய வேண்டும்.

189125

KALANILAYAM.
REG. NO. M, 2324.

# பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமூக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

| | | |
|---|---|---|
| உள்நாடு சந்தா | ரூபா | 2 0 0 |
| வெளிநாடு ,, | ,, | 2 8 0 |
| தனிப்பிரதி விலை | அணு | 0 4 0 |

விலாசம்:—'பாரதி' கார்யாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

# அமிர்த குண போதினி



5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை. விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ. 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனும்.

# ஆங்கில ஆசான்



10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளைவிட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவாயிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

# தேவதாசிகள்

அமெரிக்க மாது மிஸ் மேயோவால் எழுதப்பட்டது. இந்தியர் பழக்க வழக்கங்களைப்பற்றி எழுதியுள்ளார். படிக்க வேடிக்கை. விலை ரூ. 1-0-0.

முத்தையா புக் டிப்போ,
தபால் பெட்டி 99, சென்னை.

# கம்ப ராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

| | | | |
|---|---|---|---|
| பால காண்டம் | ... | ரூ. | 5. |
| அயோத்தியா காண்டம் | | ரூ. | 5. |
| ஆரண்ய காண்டம் | ... | ரூ. | 4. |
| கிஷ்கிந்தா காண்டம் | ... | ரூ. | 4-8. |
| சுந்தர காண்டம் | ... | ரூ. | 5. |

(வி.பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

# நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில் உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர்:—"கலா நிலயம்",
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)